பக்கங்கள்: 12

# காலைக்கதிர்
Kalaikathir

விடியல் 03 வள்ளுவர் ஆண்டு 2050 புரட்டாதி 24 சனிக்கிழமை 12.10.2019 கதிர் 341

இனி து ரகசியம் அல்ல!

ஐக்கிய தேசிய முன்னணியில் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸவுக்குத் திடீரென பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா மீது அளவற்ற பிரியமும் நம்பிக்கையும் ஏற்பட்டிருக்கின்றமை ஏன் என விசாரித்துப் பார்த்தேன்.

பக்கம் 02 »

# மொட்டு பெரு வெற்றி

## எல்பிட்டிய பிரதேச சபைத் தேர்தலில் ஆளும் ஐ.தே.கவுக்குப் படுதோல்வி




கொழும்பு, ஒக். 12

எல்பிட்டிய பிரதேச சபைத் தேர்தலில் மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான ஶ்ரீலங்கா பொதுஜன பெரமுன 17 ஆசனங்களைப் பெற்று பெரு வெற்றி பெற்று ஆட்சியைக் கைப்பற்றியுள்ளது.

ஜனாதிபதித் தேர்தலுக்கான பிரசாரப் பணிகள் உச்சக்கட்டத்தை எட்டியுள்ள நிலையில் பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியிருந்த இந்தத் தேர்தலில் அறுதிப் பெரும்பான்மையுடன் வெற்றி பெற்றுத் தனது பலத்தைக் காட்டியுள்ளது மொட்டுக் கட்சி.

பக்கம் 03 »

## கோட்டாவை வீழ்த்துவதற்கே 35 பேர் களமிறக்கப்பட்டனர்!

### மஹிந்த பகிரங்கக் குற்றச்சாட்டு



கொழும்பு, ஒக். 12

கோட்டாபய ராஜபக்ஷவின் வாக்குகளைச் சிதைப்பதற்காகவே ஜனாதிபதி வேட்பாளர்கள் 35 பேர் இம்முறை தேர்தலில் களமிறங்கியுள்ளனர் என எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

குருநாகல் மாவட்டத்தில் பொதுஜன பெரமுன காரியாலயத்தைத் திறந்து

பக்கம் 03 »

## அன்று மஹிந்தவை தோற்கடிக்கச் சொன்னவர்கள் இப்போது கோட்டாவுடன் பேசுவது நியாயமானதா?

### கூட்டமைப்பிடம் கேட்கிறது தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், ஒக். 12

மஹிந்த மற்றும் கோட்டாபய இன அழிப்பைச் செய்தவர்கள் என்பதால் அவர்களைவெற்றிபெறச்செய்யக்கூடாது என்று கடந்த காலங்களில் கூறி வந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் இப்போது

பக்கம் 03 »

## பல்கலை கல்விசாரா ஊழியர்களின் பணிப்புறக்கணிப்பு இடைநிறுத்தம்

கொழும்பு, ஒக். 12

பல்கலைக்கழகங்களின் கல்விசாரா ஊழியர்கள் கடந்த 33 நாள்கள் முன்னெடுத்த தொடர் வேலை நிறுத்தப் போராட்டம் இடைநிறுத்தப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதனடிப்படையில் எதிர்வரும் திங்கட்கிழமை முதல் ஊழியர்கள் பணிக்குத் திரும்புவர் எனத் தொழிற்சங்கம் தெரிவித்துள்ளது.

தமது சம்பள உயர்வு தொடர்பில் அரசிடம் கோரிக்கை முன்வைக்கப்பட்டபோதிலும் தீர்வெதுவும் வழங்கப்படாமை காரணமாக அவர்கள் கடந்த மாதம் வேலை நிறுத்தத்தில் குதித்தனர்.

15 பல்கலைக்கழகங்களைச் சேர்ந்த 25 தொழிற்சங்கங்கள்

பக்கம் 02 »

## உடுவில் பகுதியைச் சேர்ந்த மாணவனை காணவில்லை

### பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு

யாழ்ப்பாணம், ஒக். 12

உடுவிலைச் சேர்ந்த 16 வயதுப் பாடசாலை மாணவனைக் காணவில்லை எனச் சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் அவரது பெற்றோரால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

வீட்டிலிருந்து நேற்று முன்தினம் முற்பகல் மருந்து எடுப்பதாகக் கூறிச் சென்ற மாணவன் நேற்று இரவு வரை வீடு திரும்பவில்லை என்று முறைப்பாட்டில்

பக்கம் 03 »

## சென்னையிலிருந்து பலாலிக்கு வாரத்தில் 7 விமான சேவைகள்

### அனுமதி அளித்தது இந்திய அரசு



சென்னை, ஒக். 12

சென்னையில் இருந்து பலாலி விமான நிலையத்துக்கு வாரத்துக்கு ஏழு விமான சேவைகளை நடத்துவதற்கு,

பக்கம் 03 »

## தவறாது வாக்களியுங்கள்! பகிஷ்கரிக்க வேண்டாம்!!

### தியாகி அறக்கொடை நிறுவுநர் மன்றாட்டம்



யாழ்ப்பாணம்,ஒக்.12

நடைபெறவிருக்கும்ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்கள் தங்கள் ஜனநாயகக் கடமையைக் கட்டாயம் நிறைவேற்ற வேண்டும். பகிஷ்கரிக்கிறோம் என்று கூறி வாக்களிக்காமல் விட்டுவிடக் கூடாது.

பக்கம் 03 »

## ஊடகவிலாளர்களை சந்திக்க தயங்குகின்றார் கோட்டாபய

### முஜிபுர் ரஹ்மான் சுட்டிக்காட்டு

கொழும்பு, ஒக். 12

கோட்டாபய ராஜபக்ஷ ஊடகவியலாளர்கள் முன்னிலையில் பேசினால், அவர்களின் தேர்தல் திட்டம் முழுமையாக சிதைந்துவிடும் என்பதாலேயே ஊடக சந்திப்புக்களை அவர்கள் நடத்தவில்லை என ஐக்கிய

பக்கம் 03 »

## வாக்குச்சீட்டில் அடுத்தடுத்து கோட்டா, நாமலின் பெயர்கள்

கொழும்பு, ஒக். 12

ஜனாதிபதித் தேர்தலுக்கான வாக்குச் சீட்டில், கோட்டாபய ராஜபக்ஷவின் பெயரும் நாமல் ராஜபக்ஷவின் பெயரும் அடுத்தடுத்து இடம்பெறவுள்ளன.

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களின் ஒழுங்கும், வேட்பாளர்க

பக்கம் 02 »

## பொலிஸ் அழைத்துச் சென்ற நபர் உயிரிழந்தமையால் குழப்பநிலை

(எஸ். நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், ஒக். 12

பொலிஸாரால் அழைத்துச் செல்லப்பட்ட குடும்பத் தலைவர் ஒருவர் உயிரிழந்தமையால் உறவினர்களிடையே குழப்ப நிலை ஏற்பட்டது.

பக்கம் 03 »

## சிறுபான்மை இனம் என்று விளிப்பதை ஒருபோதும் ஏற்றுக்கொள்ளமாட்டேன்!

### சகலருக்கும் சமவுரிமை ,ஒரே நீதி என்கிறார் சஜித்



கொழும்பு, ஒக். 12

இலங்கை வாழ் அனைத்து மக்களுக்கும் சமமான உரிமையை ஏற்படுத்துவதே எனது இலக்கு.

-இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சி

பக்கம் 03 »

## தெரிவுக்குழுவின் அறிக்கை 23 ஆம் திகதி வெளியாகும்!

கொழும்பு, ஒக். 12

ஈஸ்டர் ஞாயிறு குண்டுத் தாக்குதல் குறித்து ஆராய நியமிக்கப்பட்ட நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் இறுதி அறிக்கை எதிர்வரும் 23 ஆம் திகதி நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

2019 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 21 ஆம் திகதி பயங்கரவாதத் தாக்குதல்கள் நடத்தப்பட்ட பின்னர் இது குறித்து ஆராய்ந்து

பக்கம் 02 »



மாமல்லபுரத்தில் சீன அதிபர் ஜி ஜின்பிங்கை சந்தித்த பிரதமர் மோடி, அங்குள்ள வரலாற்று சிற்பங்கள் குறித்து விளக்கினார். அர்ஜுனன் தபஸ் பகுதியில் இரு நாட்டு தலைவர்களும் புகைப்படம் எடுத்துக் கொண்டனர்.

# 33 ஆவது மாடியில் இருந்து விழுந்து ஆஸ்திரேலிய சுற்றுலாப் பயணி பலி!

கொழும்பு, ஒக். 12

கொழும்பு – கொம்பனித்தெரு, யூனியன் பிளேஸ் பகுதியில் உள்ள ஹோட்டலொன்றின் 33 ஆவது மாடியிலிருந்து நேற்றுக் காலை தவறி விழுந்து, வெளிநாட்டவர் ஒருவர் பலியானார். ஆஸ்ரேலிய நாட்டவரான போல் ஜேம்ஸ் (வயது 52) என்பவரே உயிரிழந்தவராவார். பிரேத பரிசோதனைக்காக வைத்தியசாலையின் பிரேத அறையில் சடலம் வைக்கப்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# நெடுங்கேணி விபத்தில் குடும்பஸ்தர் மரணம்

வவுனியா, ஒக். 12

வவுனியா வடக்கு – நெடுங்கேணி பட்டிக்குடியிருப்பில் இடம்பெற்ற விபத்தில் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

கடந்த புதன்கிழமை காலை இலுப்பைக்குளம் பகுதியில் கட்டுப்பாட்டை இழந்த மோட்டார் சைக்கிள் விபத்திற்குள்ளாகியது.

இதில் படுகாயமடைந்த குடும்பஸ்தர் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையில் சிகிச்சை பலனின்றி நேற்று முன் தினம் உயிரிழந்துள்ளார்.

பட்டிகுடியிருப்பு பகுதியைச் சேர்ந்த கந்தையா உதயகுமார் என்ற இரண்டு பிள்ளைகளின் தந்தையே உயிரிழந்துள்ளார்.

# ஏழு இந்திய மீனவர்களுக்கு ஒக். 23 வரை விளக்கமறியல்



யாழ்ப்பாணம், ஒக். 12

வடக்குக் கடற்பிரந்தியத்தில் அத்துமீறி மீன்பிடித்தபோது, கைதுசெய்யப்பட்ட இந்திய மீனவர்கள் 7 பேரை எதிர்வரும் 23ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

காரைநகர் கடற்பரப்பில் இலங்கைக் கடற்படையினரால் கடந்த புதன் இரவு இவர்கள் கைது செய்யப்பட்டிருந்தனர்.

அவர்கள் ஏழு பேரும் நேற்று முன் தினம் யாழ்ப்பாணத்தில் உள்ள மாவட்ட நீரியல் வளத் திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டனர். நேற்று அவர்களை நீதிமன்றில் முன்னிலைப்படுத்தியபோது இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. (ஐ-07)



# எதியோப்பியப் பிரதமருக்கு சமாதான நோபல் பரிசு

2019 ஆம் ஆண்டுகான அமைதிக்கான நோபல் பரிசை எதியோப்பிய பிரதமர் அபி அகமத் அலி பெறுகிறார்.

எரித்திரியா போன்ற அண்டை நாடுகளுடனான எல்லைப் பிரச்சினைக்கு அமைதியான முறையில் தீர்வு கண்டமை மற்றும் சர்வதேச ஒத்துழைப்புக்காக அபி அலி அகமத்துக்கு 2019 ஆம் ஆண்டுக்குரிய அமைத்திக்கான நோபல் பரிசு அறிவிக்கப்பட்டுள்ளதாக நோபல் பரிசுகளை வழங்கும் அக்கடமி தெரிவித்துள்ளது.

## தெரிவுக்குழுவின்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாடாளுமன்றத்துக்கு அறிக்கையிடுவதற்கான நாடாளுமன்ற விசேட குழு கடந்த மே மாதம் 22 ஆம் திகதி சபாநாயகர் கரு ஜயசூரியவினால் நியமிக்கப்பட்டது.

இந்தக் குழு முதற்தடவையாக மே மாதம் 29 ஆம் திகதி கூடியிருந்ததுடன் இறுதியாக இம்மாதம் 17 ஆம் திகதி கூடவுள்ளது. இறுதி அறிக்கை சமர்ப்பிக்கப்பட்ட பின்னர் எதிர்வரும் 24 ஆம் திகதி விசேட ஊடகவியலாளர் சந்திப்பொன்றை நடத்த எதிர்பார்த்திருப்பதாக பிரதிச் சபாநாயகர் ஆனந்த குமாரசிறி தெரிவித்தார். (ஐ)

## பல்கலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தப் போராட்டத்தை முன்னெடுத்தன.

தொடர்சியாக 33 நாள்கள் கல்வி சாரா ஊழியர்களின் வேலை நிறுத்தப் போராட்டம் காரணமாகப் பல்கலைக்கழகங்களின் கல்விச் செயற்பாடுகள் முடங்கின. (ஐ)

## வாக்குச்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ளுக்கான சின்னங்களும் நேற்று தேர்தல்கள் ஆணைக்குழுவினால் வெளியிடப்பட்டுள்ளன.

வாக்குச்சீட்டில் வேட்பாளர்கள் எந்த ஒழுங்கில் இடம்பெறுவார்கள், அவர்களின் சின்னம் என்ன என்பதை விளக்கும் வகையில் தேர்தல்கள் ஆணைக்குழு இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளது.

இதன்படி, வாக்குச் சீட்டில் முதலாவது இடத்தில் நாய் சின்னத்தில் போட்டியிடும் அபரக்கே புஞ்ஞானந்த தேரரின் பெயர் இடம்பெறவுள்ளது. கடைசி இடத்தில் மின்குமிழ் சின்னத்தில், போட்டியிடும் தேசிய மக்கள் கட்சியின் வேட்பாளரான ஜெனரல் மகேஷ் சேனநாயக்கவின் பெயர் இடம் பெறவுள்ளது.

அதேவேளை, பொதுஜன பெரமுனவின் வேட்பாளர் கோட்டாபய ராஜபக்ஷவுக்கு அடுத்ததாக, மூக்குக் கண்ணாடிச் சின்னத்தில் போட்டியிடும் தேசிய ஒற்றுமை முன்னணியின் நாமல் ராஜபக்ஷவின் பெயர் இடம் பெறவுள்ளது. (ஐ)

## இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சஜித் பிரேமதாஸா சில தினங்களுக்கு முன்னர் வழங்கிய ஒரு பேட்டி நேற்றைய 'டெய்லி மிரர்' பத்திரிகையில் விலாவாரியாகப் பிரசுரமாகியிருந்தது.

அதில் நாட்டின் தேசியப் பாதுகாப்புப் பற்றியும் அவரிடம் கேள்வி எழுப்பப்பட்டது. மிக நீண்ட விளக்கமான பதில் ஒன்றை அக்கேள்விக்கு சஜித் பிரேமதாஸ அளித்திருந்தார். ஆனால், அதில் சரத் பொன்சேகா குறித்தோ, அல்லது தாம் அதிகாரத்துக்கு வந்தால் நாட்டின் தேசியப் பாதுகாப்பு விவகாரத்தைக் கையாளும் பொறுப்பை அவரிடம் கொடுக்கும் திட்டத்தில் தாம் உள்ளார் என்பது பற்றியோ எதுவுமே சஜித் தெரிவித்திருக்கவில்லை.

ஆக, சில தினங்களுக்கு முன்னர் அந்தப் பேட்டியை அளிக்கும் போது இந்த எண்ணம் – அதாவது தேசியப் பாதுகாப்பு விடயங்களைக் கையாளும் பொறுப்பை சரத் பொன்சேகாவிடம் ஒப்படைக்கும் திட்டம் – சஜித்துக்கு இருக்கவில்லை என்பது தெளிவு.

சில தினங்களுக்குள்தான் இந்த முடிவுக்கு அவர் வந்திருக்கின்றார். அத்தகைய முடிவுக்கு திடீரென சஜித் வந்தமையின் பின்னணியை சில அரசியல் வட்டாரங்கள் அம்பலப்படுத்தின. விடயம் இதுதான்:–

இந்த ஜனாதிபதித் தேர்தலில் தேசிய ஜனநாயகக் கட்சியின் சார்பில் முன்னாள் இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் மகேஷ் சேனநாயக்கா களம் இறங்கியிருக்கின்றார். அவர் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு மிக நம்பிக்கையானவராகச் செயற்படுபவர்.

எது, எப்படி என்றாலும் யார், எந்த அணியுடன் சேர்ந்திருந்தாலும், சஜித் பிரேமதாஸவுக்கும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கும் மிக நெருக்கம் இருக்கின்றமையும் –

சரத் பொன்சேகாவுக்கும் மைத்திரிபால சிறிசேனவுக்கும் இடையில் அரசியல் விரோதம் சூடாக இருக்கின்றமையும் நாம் அறிந்தவையே.

ஜெனரல் மகேஷ் சேனநாயக்கா மீது ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனாவுக்கு உள்ள செல்வாக்கைப் பயன்படுத்தி, அவருடன் சஜித் தரப்பு சில தொடர்பாடல்களை மேற்கொண்டதாம்.

சஜித்துக்கு ஆதரவு தெரிவித்து ஜெனரல் மகேஷ் சேனநாயக்காவை இந்தத் தேர்தல் போட்டியிலிருந்து விலகும்படியும் –

அப்படி விலகினால் அதற்குப் பதிலாகத் தேர்தலில் வென்று ஜனாதிபதியானதும், சஜித் நிர்வாகத்தில் தேசியப் பாதுகாப்புத் தொடர்பான முக்கிய பொறுப்பு ஜெனரல் மகேஷ் சேனநாயக்காவுக்கு வழங்கப்படும் எனவும் –

சஜித் தரப்பினால், தெரிவிக்கப்பட்டதாம். ஆனால் இதற்கு மகேஷ் சேனநாயக்கா தரப்பு இணங்கவில்லை.

ஆனால், இந்தத் தகவல் ஐ.தே.க. பக்கத்திலிருக்கும் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகாவின் காதில் விழுந்து விட்டது. இதனால் அவர் வெறுத்துப் போனார் என்று கூறப்படுகின்றது.

கடந்த பத்து வருடங்களாக ராஜபக்ஷக்களைக் கடுமையாக எதிர்த்தபடி தாம் ஐ.தே.கவுடன் நின்றுபிடித்து அரசியல் செய்ய, வரப்போகும் புதிய ஐ.தே.க. நிர்வாகத்தில் தம்மை ஒதுக்கி விட்டு தமக்கு மிகக் கனிஷ்ட நிலையில் இருக்கும் மகேஷ் சேனநாயக்கவிடம் பாதுகாப்பு விடயங்களை ஒப்படைக்க இணங்குவதா என்று சீறியிருக்கின்றார் சரத் பொன்சேகா.

இந்த விடயத்தில் சரத் பொன்சேகாவின் கடும் அதிருப்தி கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் தெரிவிக்கப்பட்டது.

இப்படி சரத் பொன்சேகா கட்சி தொடர்பான விடயத்தில் கடும் அதிருப்தியுற்றிருக்கின்றார் என்று அறிந்த ராஜபக்ஷக்கள் சந்தர்ப்பத்தை வசமாகப் பயன்படுத்த முயன்றனர் எனக் கூறப்படுகின்றது.

*'கடந்த கால மனக்கசப்புகளை மறப்போம். மீண்டும் ஒன்றிணைந்து செயற்படுவோம். கோட்டாபயவின் புதிய அரசில் பாதுகாப்புத் தொடர்பான முக்கிய பொறுப்புத் தருவோம், வாருங்கள்!'* – என்று நம்பிக்கையான தரப்புகள் மூலம் ராஜபக்ஷக்களிடமிருந்து சரத் பொன்சேகாவுக்கு செய்திகள், தகவல்கள் பறந்தன.

நாட்டின் தமிழ், சிங்கள, முஸ்லிம் இனங்களுக்கு இடையில் புரிந்துணர்வும், மீள்நல்லிணக்கமும் ஏற்பட வாய்ப்பு உண்டோ தெரியவில்லை. ஆனால் ராஜபக்ஷக்கள் – சரத் பொன்சேகா இடையில் மீள்நல்லிணக்கம் ஏற்படுவதற்கான புரிந்துணர்வு பிரகாசம் அடைந்தது.

இது பற்றிய தகவல்கள் ஐக்கிய தேசிய கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, அமைச்சர் ரவி கருணாநாயக்கா போன்றோரை எட்ட, அவர்கள் உஷாரடைந்தனர். நிலைமையின் விபரீதத்தை உணர்ந்த அவர்கள் சஜித் தரப்புடன் அவசர அவசரமாகத் தொடர்பு கொண்டனர்.

சரத் பொன்சேகாவை வெளியே விடாமல் அரவணைக்க விரைந்து நடவடிக்கை எடுக்குமாறு சஜித் துக்கு அழுத்தத்துக்கு மேல் அழுத்தம் வந்தது.

ஆரம்பத்தில் அந்தக் கோரிக்கையைத் தட்டிக் கழிக்கத்தான் பார்த்தார் சஜித்.

சஜித்தைப் பொறுத்தவரை அவருக்கு நெருக்கமானவரான ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேனவுடன் நேரடியாக அரசியல் ரீதியில் முண்டிக் கொண்டிருப்பவர் சரத் பொன்சேகா.

இந்த முரண்பாடு காரணமாகவே சரத் பொன்சேகாவுக்கு அமைச்சர் பதவியை வழங்காமல் இழுத்தடித்து வருகின்றார் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன.

இந்தச் சமயத்தில் சரத் பொன்சேகாவை அரவணைத்து ஜனாதிபதி மைத்திரியின் எரிச்சலைச் சம்பாதிப்பதா என்ற இக்கட்டு சஜித்துக்கு.

ஆனால், ஐ.தே.கட்சியின் ஏனைய மூத்த தலைவர்கள் சஜித்தை விடவில்லை.

இந்தச் சமயத்தில் சரத்பொன்சேகா திரும்பவும் ராஜபக்ஷக்களுடன் இணைந்தால் அது ஐ.தே.கவுக்கு இந்தத் தேர்தலில் பெரும் பின்னடைவைத் தரும் என அவர்கள் சஜித்தை எச்சரித்தனர்.

இதனால்தான் சரத் பொன்சேகாவுக்கு முக்கியத்துவம் கொடுத்து அரவணைக்க வேண்டியவரானார் சஜித் என்கின்றன விடயமறிந்த வட்டாரங்கள்.

சஜித் இந்தத் தேர்தலில் வென்றால் இப்போது அறிவித்தபடி சரத் பொன்சேகாவுக்கு முக்கிய இடம் கொடுப்பாரா என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

-மின்னல்-

## அன்று..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கோட்டபாயவுடன் பேசுவதில் என்ன நியாயம் இருக்கின்றது எனக் கேள்வியெழுப்பியுள்ளது தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி.

இந்தத் தேர்தலைப் பகிஷ்கரிக்கவேண்டுமென நாங்கள் தற்போது கூறுகின்றமை கோட்டாபயவை வெல்ல வைப்பதற்கு எனச் சிலர் எம் மீது குற்றஞ்சாட்டுகின்றனர். தேர்தலைப் பகிஷ்கரிப்பதென்ற எங்கள் நிலைப்பாடு நாங்கள் யாரையும் ஆதரிப்பதற்கானது அல்ல. இந்தத் தேர்தல் பூகோளப் போட்டியைப் பயன்படுத்தி தமிழ் மக்களின் நலன்களின் அடிப்படையில் தமிழ்த் தேசத்தை அங்கீகரிக்க வேண்டுமென்பதே எங்கள் கோரிக்கையாகும் என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளர் செல்வராசா கஜேந்திரன் தெரிவித்துள்ளார்.

கொக்குவிலில் உள்ள கட்சியின் தலைமை அலுவலகத்தில் நேற்று மாலை தாம் நடத்திய ஊடக சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் கூறுகையில்–

ஜனாதிபதித் தேர்தலுக்கான வேட்புமனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில் இந்தத் தேர்தலில் எத்தகைய முடிவுகளை எடுப்பது என்பது தொடர்பாகக் கட்சிகளுக்கிடையே பல்வேறுபட்ட வாதப்பிரதிவாதங்கள் நடைபெற்று வருகின்றன.

அதிலும் இந்தத் தேர்தலில் யாரை ஆதரிப்பது, யாரை ஆதரிப்பதில்லை, பொது வேட்பாளரை நியமிப்பது, தேர்தலைப் பகிஷ்கரிப்பது என்ன குறித்து கருத்துக்கள் பரவலாகப் பேசப்பட்டு வரும் நிலைமையே காணப்படுகிறது. சில கட்சிகள் தமது நிலைப்பாடுகளை அறிவித்தும் இருக்கின்றன.

இந் நிலையில் தமிழ்த் தரப்பில் உள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கோட்டாபயவுடன் பேச இருப்பதாகச் செய்திகள் வெளிவந்திருக்கின்றன. அதாவது கோட்டாபய தரப்பினர் கூட்டமைப்பைச் சந்திக்கக் கேட்டு இருந்தனர் எனவும் ஆனாலும் இனப்பிரச்சினை தீர்வு குறித்து மஹிந்தவோடு பேசுமாறு கூறினர் எனவும் அதற்கான சந்திப்பை மேற்கொள்ள ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன எனவும் தகவல்கள் வெளியாகியிருக்கின்றன.

கோட்டாபயவும் மஹிந்தவும் தமிழ் மக்கள் மீது இன அழிப்பை கட்டவிழ்த்து விட்டவர்கள் என்பதால் கடந்த 2015 ஆம் ஆண்டு மஹிந்தவைத் தோற்கடிப்பதற்காக மகாத்மா காந்தி, நெல்சன் மண்டேலா அல்லது மார்டின் லூதர் சிங் என்று சொல்லி மைத்திரிபால சிறிசேனவை வெல்ல வைக்கும் நடவடிக்கையை கூட்டமைப்பினர் மேற்கொண்டிருந்தனர்.

இனஅழிப்பைச் செய்தவர்கள் மஹிந்த மற்றும் கோட்டாபய என்று கூறியவர்கள் இப்போது கோட்டாபயவுடன் பேசுகின்றார்கள் என்றால் அதில் என்ன நியாயம் இருக்க முடியும் என்பது தெரியவில்லை.

அவர்கள் இதுவரை சொல்லி வரும் அடிப்படையில் கோட்டா, மஹிந்த போர்க்குற்றவாளிகள் என்பதில் எந்தவிதமான மாற்றுக் கருத்துக்களும் இல்லை. இவர்கள் சர்வதேச குற்றவியல் நீதிமன்றில் நிறுத்தப்பட்டு தண்டிக்கப்படவேண்டியவர்கள் என்பது தான் எங்கள் கருத்து. அதற்காக நாங்கள் தொடர்ந்து செயற்பட்டுக் கொண்டே வந்திருக்கிறோம்.

இலங்கைத்தீவில் நடைபெறுகின்ற எந்த ஜனாதிபதித் தேர்தலிலும் இந்தப் பூகோளப் போட்டியைத் தமிழர்களுக்கு சாதகமாக மாற்றவேண்டுமென்று இருந்தால் இவர்களை நிராகரித்து தேர்தலைப் புறக்கணிக்கவேண்டுமென தமிழ் மக்களின் நலன்களின் அடிப்படையில் நாங்கள் கடந்த காலத்திலிருந்தே சொல்லி வருகின்றோம்.

இதனை நாங்கள் அப்போது சொல்லி வந்தபோதெல்லாம் இவ்வாறான நிலைப்பாட்டை எடுப்பது என்பது மஹிந்தவை வெல்ல வைப்பதற்கானது என்றும், இப்பொழுது நாங்கள் அதே கோரிக்கை நிலைப்பாட்டை வெளியிட்டிருக்கின்ற நிலையில் அது கோட்டாபயவை வெல்ல வைப்பதற்கானது என்றும் சிலர் குற்றஞ்சாட்ட முயற்சிக்கின்றார்கள்.

அப்படிப்பட்ட குற்றச்சாட்டு எங்கள் மீது முன்வைக்கப்படும் நிலையில் கூட்டமைப்பினர் கோட்டாபயவுடன் பேசுவதிலும் எந்த நியாயப்பாடுகளும் இல்லை. –என்றார். (ஐ-07)

## உடுவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
தெரிவிக்கப்பட்டுள்ளது.

உடுவில் அம்பலவாணர் வீதியைச் சேர்ந்த சுந்தரலிங்கம் ஜனுக்சன் (வயது -16) என்ற கொக்குவில் இந்துக் கல்லூரியில் பயிலும் மாணவனையே காணவில்லை.

மாணவன் நேற்று முன்தினம் காலையில் பாடசாலைக்குச் சென்று உடனேயே வீடு திரும்பியுள்ளார். தனக்கு உடல்நிலை சரியில்லை என்று தெரிவித்த அவர், மருந்து எடுத்துவிட்டு வருவதாக நேற்றுமுன்தினம் முற்பகல் வீட்டிலிருந்து சென்றார். எனினும் அவர் நேற்று இரவு வரை வீடு திரும்பவில்லை. அவரது நண்பர்கள், சக மாணவர்கள் எனத் தேடாத இடமில்லை என்று பெற்றோர், சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு வழங்கியுள்ளனர்.

மாணவனின் தாயார் சமுர்த்தி உத்தியோகத்தராக உடுவில் பிரதேச செயலகத்தில் பணியாற்றுகிறார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ-07)

## சென்னையிலிருந்து..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
எயார் இந்தியாவின் துணை நிறுவனமான அலையன்ஸ் எயார் நிறுவனத்துக்கு இந்திய அரசு அனுமதி அளித்துள்ளது.

பலாலி விமான நிலையம் புனரமைப்புச் செய்யப்பட்டு, யாழ்ப்பாணம் அனைத்துலக விமான நிலையமாக பெயரிடப்பட்டுள்ளது. இதன் திறப்பு விழா எதிர்வரும் 17ஆம் திகதி நடக்கவுள்ளது.

இந்த நிலையிலேயே, சென்னை விமான நிலையத்தில் இருந்து யாழ்ப்பாணம் மற்றும் மட்டக்களப்பு விமான நிலையங்களுக்கு வாரத்தில் 7 விமான சேவைகளை நடத்துவதற்கு இந்திய அரசு அலையன்ஸ் எயார் நிறுவனத்துக்கு அனுமதி அளித்துள்ளது.

அலையன்ஸ் எயார் நிறுவனம் வெளிநாட்டுக்கான (இலங்கை) சேவைகளை நடத்துவதற்கு, இந்தியாவின் சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சு அனுமதி அளித்துள்ளதாக ஐ.ஏ.என்.எஸ். செய்தி வெளியிட்டுள்ளது.

பலாலி மற்றும் மட்டக்களப்புக்கான விமான சேவைகளுக்கு அலையன்ஸ் எயார் நிறுவனம், ஏ.ரி.ஆர். 72-600 விமானங்களைப் பயன்படுத்தவுள்ளது. (ஐ)

## சிறுபான்மை..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
தலைமையிலான புதிய ஜனநாயக முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

சிறுபான்மை இனம் என விளிப்பதைக் கூடத்தான் விரும்பவில்லை எனவும் அவர் கூறினார்.

அமைச்சர் ரஞ்ஜித் மத்தும பண்டாரவின் கொழும்பு இல்லத்தில் தமிழ்ப் பத்திரிகைகளின் ஆசிரியர்களை நேற்றுச் சந்தித்து உரையாடியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

தற்போதைய அரசியல் நிலைமைகள் குறித்து இங்கு கருத்து வெளியிட்ட ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸ மேலும் தெரிவிக்கையில்–

ஜனாதிபதித் தேர்தலில் நான் வென்றால் இலங்கையில் வாழும் அனைத்து இன மக்களும் ஒரே வகையில் செயற்படும் திட்டங்களையே கொண்டுவரவுள்ளேன். எல்லோருக்கும் ஒரே நீதி என்பதே எனது கொள்கை. இனவாத ரீதியான செயற்பாடுகளுக்கு நான் இடமளிக்கமாட்டேன். எனது தந்தையார் காலத்தில் கூட நாங்கள் அனைத்து இனத்தவரையும் அரவணைத்தே செயற்பட்டோம்.

பெரும்பான்மைச் சிங்கள மக்களின் எண்ணப்பாட்டை மாற்ற வேண்டும். அவர்களுக்கு உண்மை நிலைமையைச் சொல்ல வேண்டும். அதனை நான் செய்வேன்.

தமிழ் ஊடகங்கள் எனது பயணத்துக்கு முழு ஒத்துழைப்பை வழங்க வேண்டும் – என்றார்.

இந்தச் சந்திப்பில் அமைச்சர்களான மனோ கணேசன், பழனி திகாம்பரம், ரவூப் ஹக்கீம், ரிஷாத் பதியுதீன் மற்றும் இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

## மொட்டு..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
எல்பிட்டிய பிரதேச சபைத் தேர்தலின் உத்தியோகபூர்வ முடிவை தேர்தல்கள் ஆணைக்குழு நேற்று இரவு 10 மணியளவில் வெளியிட்டது.

இந்தத் தேர்தலில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன 23 ஆயிரத்து 372 வாக்குகளைப் பெற்று அனைத்து வட்டாரங்களிலும் வெற்றி பெற்று 17 ஆசனங்களுடன் ஆட்சியமைக்கிறது.

ஐக்கிய தேசியக் கட்சி 10 ஆயிரத்து 113 வாக்குகளைப் பெற்று 7 ஆசனங்களையும், ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு 5 ஆயிரத்து 273 வாக்குகளைப் பெற்று 3 ஆசனங்களையும், மக்கள் விடுதலை முன்னணி 2 ஆயிரத்து 435 வாக்குகளைப் பெற்று 2 ஆசனங்களையும் கைப்பற்றியுள்ளன.

நேற்றைய தேர்தலில் 75 சதவீதமானவர்கள் வாக்களித்துள்ளனர்.

எல்பிட்டிய பிரேதேச சபைத் தேர்தலில் 53 ஆயிரத்து 384 பேர் வாக்களிப்பதற்குத் தகுதி பெற்றனர். இந்தத் தேர்தல் மூலம் எல்பிட்டிய பிரதேச சபைக்கு 28 உறுப்பினர்கள் தெரிவாகவுள்ளனர். அவர்களில் 17 பேர் தொகுதி வாரியாகவும், 11 பேர் விகிதாசர முறையிலும் தெரிவு செய்யப்படவுள்ளனர்.

மொட்டுக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் கோட்டாபய ராஜபக்ஷவுக்கான ஆதரவையும் ஐ.தே.க. ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸவுக்கான ஆதரவையும் நாடி பிடித்துப் பார்க்கும் வகையில் அமைந்த இந்தத் தேர்தலில் பொதுஜன பெரமுன தனது செல்வாக்கை வெளிப்படுத்தியிருக்கின்றது. (ஐ)

## கோட்டாவை..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
வைத்து உரையாற்றியபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்–கோட்டாபய ராஜபக்ஷவின் வாக்குகளைச் சிதைப்பதற்காகவே ஜனாதிபதி வேட்பாளர்கள் 35 பேர் இம்முறை தேர்தலில் களமிறங்கியுள்ளனர். ஆனால் அவ்வாறு எதுவும் நடக்காது. ஐக்கியதேசியக் கட்சி கூட்டங்களை நடத்துவது அவர்களது திட்டங்களையோ கருத்துக்களையோ கூறுவதற்கு அல்ல. மாறாக எம்மை விமர்சிப்பதற்காகவே கூட்டங்களை நடத்துகின்றனர். கடந்த 2015 ஆம் ஆண்டு கூறிய அதே கதைகளைத் தற்போதும் மீண்டும் கூற ஆரம்பித்திருக்கிறார்கள்.

ஆனால் அவர்கள் கடந்த நான்கரை வருடங்களாகச் செய்த வற்றைக் கூறவில்லை. மத்திய வங்கி பிணைமுறி ஊழல் குறித்து யாரும் வாய் திறக்கவில்லை. ஆட்சியைக் கைப்பற்றியவுடனேயே ஜனநாயகத்தை உறுதிப்படுத்துவதாகக் கூறி மேல்நீதிமன்ற நீதிபதியை பதவி நீக்கியமை குறித்து பேசவில்லை. போலியான குற்றச்சாட்டுக்களை முன்வைத்து ஜனாதிபதியின் செயலாளரை இந்த அரசு சிறையிலடைத்தது. இந்த அரசில் இவ்வாறு பலரும் அரசியல் பழிவாங்கல்களுக்கு உள்ளானார்கள்.

இவ்வாறு பழிவாங்கலையே பிரதானமாகக் கொண்டிருந்ததால் நாட்டிற்குச் சேவை செய்வதற்கு அரசுக்கு நேரம் இருக்கவில்லை. என்னால் ஆரம்பிக்கப்பட்ட அபிவிருத்தித் திட்டங்களுக்கு பெறப்பட்ட வெளிநாட்டுக் கடனை மீள் செலுத்துவதற்கு அதை விட மூன்று மடங்கு அதிக கடன் பெறவேண்டிய தேவை ஏற்பட்டதாகக் கூறுகின்றார்கள். ஆனால் மேலதிகமாகப் பெறப்பட்ட கடனுக்கு என்ன ஆயிற்று என்று யாருக்கும் தெரியவில்லை–என்றார். (ஐ)

## தவறாது..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
– இவ்வாறு தமிழ் சகோதரர்களை மன்றாட்டமாக வேண்டியுள்ளார் 'தியாகி அறக்கொடை நிதி'யத்தின் ஸ்தாபகரும், அதன் தலைவரும், பிரபல சமூக சேவை ஆர்வலருமான வாமதேவா தியாகேந்திரன்.

இவ்விடயம் தொடர்பாக நேற்றுக் 'காலைக்கதிர்' நாளிதழுக்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

வாக்களிப்பது நமது ஜனநாயகக் கடமை. யாருக்கு வாக்களிப்பது என்பது அவரவர் விருப்பத்தைப் பொறுத்தது. அதில் நாம் தலையிட மாட்டோம்.

வாக்களிக்காமல் தவிர்த்ததன் காரணமாக அல்லது வாக்களிக்காமல் விட்டதன் மூலம் பெரும் பாதிப்புகளையும் பின்னடைவுகளையும் நமது இனம் சந்தித்த பல துன்பியல் பட்டறிவுகள் நமக்குத் தாராளமாக உண்டு. அத்தகைய வரலாற்றுத் தவறை மீண்டும் ஒருதடவை நாம் இழைக்கக் கூடாது என நான் நினைக்கிறேன்.

அதனால்தான் நானாக முன்வந்து இந்தக் கோரிக்கையைப் பகிரங்கமாகவே முன்வைக்கிறேன்.

நவம்பர் 16 ஆம் திகதி உங்கள் சமூகக் கடமையைத் தவறாது ஆற்ற முன்வாருங்கள் என எனது யாழ் மக்களுக்குப் பணிவுடன் வேண்டுகோள் விடுக்கிறேன். – என்றார். (ஐ)

## பொலிஸ்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பொலிஸார் தாக்கியதால்தான் குடும்பத்தலைவர் உயிரிழந்தார் என்று உறவினர்கள் குற்றஞ்சாட்டினர்.

எனினும் தாம் கைது செய்ய முன்னர், சந்தேகநபர் அலரி விதையை உட்கொண்டிருந்தார் என்றும், பொலிஸ் நிலையத்தில் அவர் வாந்தி எடுத்தமையால் வைத்தியசாலைக்குக் கொண்டு சென்ற நிலையில் உயிரிழந்தார் என்றும் நெல்லியடிப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் நெல்லியடி பொலிஸ் நிலையத்தில் நேற்று முன் தினம் வியாழக்கிழமை இரவு இடம்பெற்றது.

சம்பவத்தில் துன்னாலையைச் சேர்ந்த ஜே.ரூபன் (வயது – 40) என்ற குடும்பத் தலைவரே இவ்வாறு உயிரிழந்தார்.

குடும்பவன்முறை தொடர்பில் குடும்பத் தலைவருக்கு எதிராக நெல்லியடி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டது. இது தொடர்பில் விசாரணைக்காக அவரை அழைத்த போதும் அவர் பொலிஸ் நிலையத்துக்கு வருகை தராமல் தலைமறைவாகியிருந்தார்.

நேற்று முன்தினம் அவர் வீட்டுக்கு அருகிலுள்ள காணி ஒன்றில் நிற்கிறார் எனப் பொலிஸ் நிலையத்துக்கு தகவல் வழங்கப்பட்டது. அதனடிப்படையில் நேற்று முன் தினம் இரவு 7.30 மணியளவில் அங்கு சென்ற பொலிஸார் அழைத்து வந்தனர்.

பொலிஸ் நிலையத்தில் குடும்பத்தலைவரிடம் வாக்கு மூலம் பெறப்பட்டவேளை, இரவு 10 மணியளவில் அவர் வாந்தி எடுத்தார். தான் அலரி விதை உட்கொண்டார் எனவும் உடல்நிலை பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தமையால் உடனடியாக மந்திகை வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டார்.

அங்கு அவர் உயிரிழந்தார் என்று தெரிவிக்கப்பட்டது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவரின் உடல் மந்திகை வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. உடற்கூற்றுப் பரிசோதனை இடம்பெறுததால் அவரது உயிரிழப்புக்கான காரணத்தைச் சுயாதீனமாக அறியமுடியவில்லை. (ஐ-07)

## ஊடகவியலாளர்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் தெரிவித்துள்ளார்.

ஐ.தே.க.வின் தலைமையகமான சிறிகொத்தாவில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதனிடையே, சஜித் பிரேமதாஸ பல்வேறு ஊடகவியலாளர் சந்திப்புக்களை நடத்தியதுடன் செய்தியாளர்களின் கேள்விகளுக்கும் பதிலளித்திருக்கிறார் எனவும் அவர் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்–

கோட்டாபாய ராஜபக்ஷ தான் ஆட்சிக்கு வந்தால் சிறையில் அடைக்கப்பட்டிருக்கும் இராணுவத்தினர் அனைவரையும் விடுதலை செய்வேன் என்று குறிப்பிட்டார்.

நீதிமன்றத்தின் முன்னிலையில் நிறுத்தப்பட்டு, குற்றவாளிகள் என்று தீர்மானிக்கப்பட்டவர்களை விடுதலை செய்வதாகவே அவர் கூறுகின்றார்.

எனவே நீதிமன்றம் முழுமையாக அவருடைய ஆதிக்கத்தின் கீழ் கொண்டுவரப்படும் என்பதையே அவர் இக்கருத்தின் ஊடாக வெளிப்படுத்தியுள்ளார் –என்றார்.

# நமது பார்வை

உண்மை – நேர்மை – பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி – 021 222 3000,
மின்னஞ்சல் – kalaikkathirnews@gmail.com
இணையம் – https://kalaikathir.online

## சஜித் அறிவிப்பின் பின்னணி

தாம் ஜனாதிபதித் தேர்தலில் வெற்றிபெற்றவுடன் தேசியப் பாதுகாப்பைப் பலப்படுத்தும் – உறுதிப்படுத்தும் – பொறுப்பை முன்னாள் இராணுவத் தளபதியான பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகாவுக்கு வழங்குவார் என ஐக்கிய தேசியக் கட்சி தலைமையிலான தேசிய ஜனநாயக முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸ அறிவித்திருக்கின்றார்.

ஜனாதிபதித் தேர்தலுக்கான வேட்பு மனுத் தாக்கல் செய்த பின்னர் தாம் நடத்திய முதலாவது பிரசாரக் கூட்டத்தில் – கொழும்பு காலி முகத்திடலில் அலைகடலெனத் திரண்டிருந்த சுமார் இரண்டு லட்சம் மக்களின் முன்னால் – வைத்து இந்த அறிவிப்பை அவர் விடுத்திருக்கின்றார்.

தமக்குப் பிரதான போட்டியாளராக இருக்கும் பொதுஜனப் பெரமுனவின் வேட்பாளர் கோட்டாபய ராஜபக்ஷ அநுராதபுரத்தில் நடந்த தனது முதலாவது பிரசாரக் கூட்டத்தில் கடும் இராணுவ நிலைப்பாட்டை எடுக்குமாற்போல உரை நிகழ்த்திய பின்னணியில் –

அதற்குத் தாமும் சளைத்தவர் அல்லர், இராணுவ விவகாரங்களில் விட்டுக் கொடுக்காத – தயவு தாட்சண்யம் காட்டாத – தலைவராகவே இருப்பார் என்ற செய்தியை வெளிப்படுத்தவே இப்படி சரத் பொன்சேகாவை முன்னிறுத்தும் ஓர் அறிவிப்பை சஜித் பிரேமதாஸ வெளியிட்டார் எனப் பலரும் கருதுகின்றனர்.

அதில் உண்மை இருந்தாலும், அது மட்டும் காரணமல்ல என்பதுதான் யதார்த்த நிலைமையாகும்.

ஏற்கனவே, தமிழர்களின் உரிமைக்கான விடுதலைப் போராட்ட விவகாரங்களில் வேட்பாளர் சஜித் பிரேமதாஸவின் தந்தையார் முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாஸ குறித்து தென்னிலங்கையில் பலத்த விமர்சனங்கள் இன்னும் உள்ளன.

இந்திய அமைதிப் படையினால் இல்லாதொழிக்கப்படும் நிலைக்கு உட்படுத்தப்பட்டிருந்த தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு, இலங்கை இராணுவம் மூலம் லொறிக் கணக்கில் ஆயுதங்களை விநியோகித்து, புலிகளை மீள உயிர்ப்பிக்கச் செய்து, இலங்கை அரசுத் தரப்புக்கே பெரும் துரோகம் செய்தவர் என்றும் –

அரசுப் படைகள் – புலிகள் மோதல் 1990 களில் மீண்டும் வெடித்தபோது – இரண்டாம் கட்ட ஈழப்போர் மூண்ட சமயம் – கிழக்கிலும் வன்னியிலும் விடுதலைப் புலிகளினால் வளைக்கப்பட்ட பல நூற்றுக்கணக்கான இலங்கைப் பொலிஸாரை, புலிகளை நம்பி அவர்களிடம் சரணடையுமாறு வழிகாட்டி, அவர்களின் உயிரிழப்புக்குக் காரணமானவர் என்றும் –

பல குற்றச்சாட்டுக்கள் இப்போதும் தென்னிலங்கையில் ரணசிங்க பிரேமதாஸ மீது உண்டு.

இதுபோன்ற விடயங்களைக் கிளறி, சஜித் பிரேமதாஸவின் தந்தை நாட்டின் தேசிய பாதுகாப்புக்கு ஊறு விளைவித்தவர் எனக் காட்டி, ஆகவே அவருக்கு மாறாக, இறுதிவரை தயவு தாட்சண்யம் காட்டாது புலிகளுடன் மோதி அந்த இயக்கத்தை முற்றாக அழித்த கோட்டாபயவே நாட்டின் தேசியத் தலைவராகத் தகுதி உடையவர் என்ற பிரசாரம் தெற்கில் முன்னெடுக்கப்படும் வாய்ப்புகள் அதிகம் உண்டு.

அவற்றுக்கு நேரக் காலத்துடன் 'அடைப்பு' போடும் முயற்சியாகவும், கோட்டாபய போன்று அறைக்குள் இருந்து யுத்தத்தை வழி நடத்தாமல், களத்தில் நின்று அந்த யுத்தத்தை நடத்தி முடித்து வெற்றி கண்ட ஒரு யுத்த 'ஹீரோவை' நான் பக்கத்தில் வைத்திருக்கிறேன் என்பதைக் காட்டவும் மேற்படி அறிவிப்பை சஜித் பிரேமதாஸ ஆரம்பத்திலேயே – முதல் கூட்டத்திலேயே – வெளியிட்டார் என சிலர் நம்புகின்றனர். ஆனால், அதற்கு அப்பாலும் சில காரணங்கள் உண்டு.

தமது இராணுவ சேவையிலிருந்து ஓய்வு பெற்ற காலத்தில் இருந்து– கடந்த பத்து ஆண்டுகளாக – ஐக்கிய தேசியக் கட்சித் தரப்புடன்தான் சரத் பொன்சேகா நிற்கின்றார். ஆனால் அவருக்குப் பாதுகாப்புத் தொடர்பான எந்த அமைச்சுப் பதவியோ, அரசியல் பொறுப்புகளோ கொடுக்கப்படவில்லை; அல்லது கொடுக்கப்பட முடியவில்லை.

சரத் பொன்சேகாவின் மனதில் மிக ஆழமான ஆதங்கத்தை ஏற்படுத்தியுள்ள இந்த விடயத்தை மஹிந்த தரப்பில் சில 'அண்டகிரவுண்ட்' மூளைகள் வசமாகப் பயன்படுத்த முயற்சித்தன என அண்மைக் காலத்தில் செய்திகள் கசிந்திருந்தன.

'கடந்த கால கசப்புணர்வுகளை மறந்து விட்டு வாருங்கள். நடந்தவற்றை மறந்து இரு தரப்புகளுமே மன்னித்து ஒன்றுபட்டுச் செயற்படலாம். கோட்டாவின் ஆட்சியில் முக்கிய பொறுப்புகள், பதவி நிலைகள் தரப்படும்.' – என்ற செய்தி சரத் பொன்சேகாவுக்கு அனுப்பப்பட்டது. இதனடிப்படையில் திரை மறைவுப் பேச்சுகளும் மும்முரமாக நடந்து வருகின்றன என்ற செய்திகளும் கசிந்திருந்தன.

இந்தப் புதிய புரிந்துணர்வு முயற்சிக்கு – மீளிணக்க எத்தனத்துக்கு – நிரந்தர ஆப்பு வைத்து, அப்படி இணைப்பு நிகழாமல் தடுப்பதற்கான துரும்புச் சீட்டாகவே தனது ஆட்சியில் தேசிய பாதுகாப்பு விடயம் சரத் பொன்சேகாவிடம் கையளிக்கப்படும் என்ற அறிவிப்பை அவசரப்பட்டு விடுத்திருக்கின்றார் சஜித் பிரேமதாஸ.

சோழியன் குடுமி சும்மா ஆடாதல்லவா...?

# நடுநிலை வகிக்க ஜனாதிபதி எடுத்த முடிவு மிகச் சிறந்தது

## பாராட்டுகின்றார் மஹிந்த



கொழும்பு, ஒக். 12

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் நடுநிலை வகிக்கப்போகிறார் என ஜனாதிபதி எடுத்த முடிவு நல்லதொரு விடயமெனப் பொதுஜன பெரமுனவின் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

மாவத்தகம பிரதேசத்தில் பொதுஜன பெரமுன கட்சியின் காரியாலயத்தைத் திறந்து வைத்த பின்னர் செய்தியாளர்களிடம் பேசுகையில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

இந்த நாடு ஒவ்வொரு துறைகளிலும் வீழ்ச்சியடைந்துள்ளது. கடந்த ஐந்து வருடங்களாக நாடாளுமன்றில் தெரிவிக்கும் எந்தவொரு கருத்தையும் பிரதமர் காதில் வாங்கிக்கொள்கிறார் இல்லை.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் நடுநிலை வகிக்கப்போகிறார் என ஜனாதிபதி எடுத்த முடிவு நல்லது. அதேநேரம், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் உள்ள அனைவரும் பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் கோட்டாபயவுக்கு ஆதரவளிப்பதற்கு முடிவெடுத்துள்ளார்கள்.

எல்பிட்டிய பிரதேச சபைத் தேர்தலில் நல்ல முடிவு கிடைக்கும். அதனைக் கொண்டாடத் தயாராகுங்கள் என கட்சி ஆதரவாளர்களைக் கேட்டுக் கொள்கின்றேன்.

இந்த வெற்றி, எதிர்வரும் நவம்பர் 16 ஆம் திகதி கோட்டாபய ஜனாதிபதித் தேர்தலில் வெல்வதற்கான ஆரம்பமாகும் – என்றார். (ஐ)

# கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலையில் புதிய வகுப்பறைக் கட்டடத்துக்கு அடிக்கல்









யாழ்ப்பாணம், ஒக். 12

தேசிய கொள்கைகள் பொருளாதார விவகாரம் மீள்குடியேற்றம் மற்றும் புனர்வாழ்வு, இளைஞர் விவகாரம் வடமாகாண அபிவிருத்தி அமைச்சின் ஒரு கோடி 20 இலட்சம் ரூபா நிதி ஒதுக்கீட்டில் யாழ். கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலையில் புதிய வகுப்பறைக் கட்டடத் தொகுதிக்கான அடிக்கல் நேற்று நட்டு வைக்கப்பட்டது.

பாடசாலையின்அதிபர் தனபாலசிங்கம் தலைமையில் நடைபெற்ற இந்த அடிக்கல் நாட்டும் நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டிருந்த மேற்படி அமைச்சின் செயலாளர் வீ.சிவஞானசோதி அடிக்கல்லை நட்டு வைத்தார்.

இந்த நிகழ்வில் வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் எஸ். சுகிர்தன், முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் எஸ். தவராசா, யாழ் மாவட்ட செயலக மேலதிக அரச அதிபர்எஸ். முரளிதரன், நல்லூர் பிரதேச செயலர், பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள், பழைய மாணவர்கள், பெற்றோர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ஐ- 07)

## 7,210 படையினருக்கு பதவி உயர்வு!

கொழும்பு, ஒக். 12

இலங்கை இராணுவத்தின் 70ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு இராணுவ அதிகாரிகள் மற்றும் ஏனைய உறுப்பினர்கள் உள்ளடங்கலாக 7,210 பேருக்கு பதவி உயர்வுகள் வழங்கப்பட்டுள்ளன என இராணுவம் அறிவித்துள்ளது.

இதில், 210 இராணுவ அதிகாரிகளும், 7 ஆயிரம் ஏனைய படை உறுப்பினர்களும் அடங்குகின்றனர் எனக் கூறப்பட்டது.

இராணுவத்தின் வரலாற்றில் ஆண்டு நிறைவை முன்னிட்டு இவ்வளவு பேருக்கு பதவி உயர்வுகள் வழங்கப்பட்டுள்ளமை இதுவே முதற்தடவை எனவும் கூறப்படுகின்றது. (ஐ)

## நாளை

13.10.2019 ஞாயிற்றுக்கிழமை

நட்சத்திரம்: பூரட்டாதி காலை 6.50 வரை
திதி : சதுர்த்தசி பி.இ 1.18 வரை
நடேசரபிஷேகம்
இராகுகாலம் : 9.02 – 10.32
சுப நேரம் : 3.02 – 4.32

# ‘வீதி விபத்துக்களை தடுப்போம்’ நேற்று விழிப்புணர்வுப் பேரணி

கிளிநொச்சி, ஒக். 12

வீதி விபத்துக்களைத் தடுப்போம் உயிர் காப்போம் எனும் தொனிப்பொருளில் கிளிநொச்சியில் நேற்றுக் காலை விழிப்புணர்வு பேரணி ஒன்று இடம்பெற்றது.

காலை 8.30 மணி அளவில் பிராந்திய சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் அலுவலகத்திற்கு முன்பாக ஆரம்பமாகிய பேரணி கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையைச் சென்றடைந்தது

இந்த விழிப்புணர்வுப் பேரணியில் மாவட்ட செயலகம் பிரதேச செயலகங்களின் அதிகாரிகள், உத்தியோகத்தர்கள் மாவட்ட வைத்தியசாலையின் பணிப்பாளர், வைத்தியர்கள், ஊழியர்கள், மாணவர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர். (ஐ)





# ராஜபக்ஷாக்களின் சூழ்ச்சியில் சு.கவைச் சீரழிக்க வேண்டாம்!

## தயாசிறிக்கு சந்திரிகா கடிதம்

கொழும்பு, ஒக். 12

**ராஜபக்ஷாக்களின் சூழ்ச்சி வலையில் வீழ்ந்து சுதந்திரக் கட்சியை சிதைவடையச் செய்யவேண்டாம் என முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க அந்தக் கட்சியின் பொதுச் செயலாளர் தயாசிறி ஜயசேகரவுக்கு கடிதம் அனுப்பி வைத்துள்ளார்.**



பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் கோட்டாபய ராஜபக்ஷவுக்கு ஆதரவு வழங்கி பெறுமதியான கட்சியான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை அழிக்க இடமளிக்கவேண்டாம் என்றும் அவர் அந்தக் கடிதத்தில் சுட்டிக் காட்டியுள்ளார்.

சுதந்திரக் கட்சியைச் சேர்ந்தவர்கள் கோட்டாபயவுக்கு ஆதரவு வழங்குவது ஏற்புடையதல்ல. இந்தச் செயற்பாடு சுதந்திரக் கட்சியை முழுமையாகக் காட்டிக் கொடுப்பதாகும். அந்தக் கட்சியின் தலைமைத்துவத்தைக் கைவிடத் தயாரென ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கூறியிருந்தால், நாம் தலைமைத்துவத்தை ஏற்றுக் கட்சியை சிறந்த முறையில் கட்டியெழுப்பி இருப்போம் – என்றும் அவர் அக்கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளார். (ஐ)

# சஜித்தின் பிரசாரக் கூட்டத்துக்கு சென்ற ஆதரவாளர் உயிரிழப்பு

கொழும்பு, ஒக். 12

புதிய ஜனநாயக முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸவின் தேர்தல் பிரசாரக் கூட்டத்துக்குச் சென்ற குழுவினரில் ஒருவர், தான் பயணித்துக் கொண்டிருந்த பஸ்ஸிலிருந்து விழுந்ததில் உயிரிழந்துள்ளார்.

நேற்றுமுன்தினம் வியாழக் கிழமை நடைபெற்ற இந்தச் சம்பவத்தில் திருகோணமலை – தெவனிபியவர பகுதியைச் சேர்ந்த ஐக்கிய தேசியக் கட்சியின் ஆதரவாளரே உயிரிழந்துள்ளார்.

ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸவின் முதலாவது தேர்தல் பிரசாரக் கூட்டம் கொழும்பு காலிமுகத்திடலில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

அந்தக் கூட்டத்துக்கு திருகோணமலை மாவட்டம் சேருவில தொகுதி முன்னாள் அமைப்பாளர் அருண் சிறிசேனவின் தலைமையில் சென்ற குழுவினரில் ஒருவர், தான் பயணித்துக்கொண்டிருந்த பஸ்ஸிலிருந்து விழுந்ததில் உயிரிழந்தார் என விசாரணைகள் ஊடாக தெரியவந்துள்ளது.

சம்பவம் தொடர்பாக பஸ் சாரதியைப் பொலிஸார் கைது செய்துள்ளனர். (ஐ)

# கன்சைட் சித்திரவதைக் கூடத்தில் படுகொலைகள் நடந்திருக்கலாம்!

## குற்ற விசாரணைத் திணைக்களம் அறிக்கை

கொழும்பு, ஒக். 12

திருகோணமலை–கடற்படை முகாமுக்குள் உள்ள கன்சைட் எனும் நிலத்தடி சித்திரவதைக் கூடத்தில் 18 வயதுக்கும் 20 வயதுக்கும் இடைப்பட்ட இளைஞர், யுவதிகள் பலர் சுட்டுப் படுகொலை செய்யப்பட்டனர் என, கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்டுள்ள கொட்டாஞ்சேனையைச் சேர்ந்த ரஜீவ் நாகநாதன் எனும் மாணவன், அந்தச் சித்திரவதைக் கூடத்தில் இருக்கும் போது தனது தாய்க்கு தொலைபேசியில் தெரிவித்த விடயம் உண்மையே என நம்புவதற்கான சான்றுகள் உள்ளன எனக் குற்ற விசாரணைத் திணைக்களம், கோட்டை நீதிவான் ரங்க திஸாநாயக்கவுக்கு அறிவித் துள்ளது.

கொழும்பு மற்றும் அதனை அண்டிய பகுதிகளில் 5 மாணவர்கள் உள்ளிட்ட 11 பேரை வெள்ளை வானில் கடத்திச் சென்றுகப்பம்பெற்றுக்கொண்டு காணாமல் ஆக்கிய சம்பவம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுக்கும் குற்ற விசாரணைப் பிரிவின் சமூக கொள்ளைவிசாரணை அறைப் பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் நிஷாந்த சில்வா இதனை விசேட விசாரணை அறிக்கை ஊடாக கோட்டை நீதிவானுக்கு அறிவித்துள்ளார்.

இந்த விவகாரம் தொடர்பிலான விசாரணைகளில், கொழும்பு – சைத்திய வீதியில் உள்ள கடற்படைத் தலைமையகத்தில் சட்டவிரோத சிறைச்சாலையாக ஒரு வதை முகாமும், திருமலை கடற்படை முகாமுக்குள் கன்சைட் எனும் நிலத்தடி சட்ட விரோத சிறை எனும் வதை முகாமும் செயற்பட்டுள்ளமையைச் சுட்டிக்காட்டியுள்ள சி.ஐ.டி., இவை அப்போது கடற்படைத் தளபதி அட்மிரல் ஒவ்.த .பி.லீட். வசந்த கரன்னகொட அறிந்து அல்லது அவரது ஆலோசனை பிரகாரம் செயற்படுத்தப்பட்டிருக்க வேண்டும் என சந்தேகம் எழுவதாக குறிப்பிட்டுள்ளது. (ஐ)

# சஜித்தின் வெற்றி உறுதியாகி விட்டது

## கூறுகிறார் நவீன் திஸாநாயக்க



கொழும்பு, ஒக். 12

மக்கள் கூட்டத்தைப் பார்த்தவுடன் சஜித்தின் வெற்றி உறுதியாகிவிட்டது எனப் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர் நவீன் திசாநாயக்க தெரிவித்தார்.

காலி முகத்திடலில் நடைபெற்ற, ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸவை ஆதரிக்கும் கூட்டத்தில் உரையாற்றும்போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

கோட்டா ஜனாதிபதியானால் பிரதமராக மஹிந்தவும் அமைச்ரவையில் பஸில், நாமல் என குடும்ப ஆட்சி மீண்டும் வந்து விடும்.

எனவே வறிய மக்களின் வேதனைகளைப் புரிந்துகொண்டு அவர்களின் துன்பங்களை போக்கக் கூடிய ஒரே தலைவர் சஜித் பிரேமதாஸவே – என்றார். (ஐ)

# சிறுவனைக் கடித்துக் குதறிச் சாகடித்த நாய்கள் கூட்டம்

தமிழ்நாட்டில் சங்கரன்கோவில் அருகே 10 நாய்கள் கடித்து குதறியதில் 8வயது சிறுவன் ஒருவன் பரிதாபமாக உயிரிழந்தான். இச்சம்பவம் அப்பகுதியில் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

சஙகரன்கோவில் அருகே உள்ள ரெங்க சமுத்திரத்தை சேர்ந்தவர் சேதுபதியின் மகன் சந்தோஷ் என்ற சிறுவனே உயிரிழந்தவன் ஆவான்.

சந்தோஷ் தினமும் பள்ளி சென்று விட்டு மாலையில் வீட்டிற்கு வந்ததும் நண்பர்களுடன் சேர்ந்து விளையாடச் செல்வது வழக்கம். இதே போல் நேற்று முன்தினமும் விளையாடச் சென்ற சந்தோஷ் இரவு 7 மணி ஆகியும் வீடு திரும்பவில்லை. இதையடுத்து சிறுவனின் பெற்றோர் அக்கம் பக்கம் மற்றும் உறவினர் வீடுகளில் தேடிப் பார்த்தும் கிடைக்கவில்லை.



இந்நிலையில் அப்பகுதியில் உள்ள அந்தோணிச் சாமி என்பவரின் தோட்டத்தில் சிறுவன் இறந்து கிடக்கிறான் எனத் தகவல் கிடைத்தது. இதையடுத்து அதிர்ச்சியடைந்த அவனது பெற்றோர் அங்கு சென்று பார்த்தனர். அப்போது சிறுவன் சந்தோஷைப் பத்து நாய்கள் கடித்து குதறி இருக்கின்றமை தெரியவந்தது. இதையடுத்து சிறுவன் உடலைப் பார்த்து பெற்றோர்கள், உறவினர்கள் கதறித் துடித்தனர்.

சிறுவன் சாவுக்கு காரணம் என்ன என்பது குறித்துப் பொலிஸார் விசாரணை நடத்தினர். சிறுவனை நாய்கள் கடித்து குதறியதில் அவனது உடல் மிகவும் பரிதாபமான நிலையில் இருந்தது.

இதனால் சிறுவனின் உடல் பிரேத பரிசோதனைக்கு அனுப்பப்படாமல் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. இச்சம்பவம் அப்பகுதியில் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.



# ஒவ்வொரு ராணுவ வீரர் இறப்புக்கும் பத்து எதிரிகள் கொல்லப்படுவார்கள்

## உள்துறை அமைச்சர் அமித் ஷா எச்சரிக்கை

மும்பை,ஒக்.12

இந்தியாவின் ஒவ்வொரு இராணுவ வீரரின் மரணத்திற்கும் 10 எதிரிகள் கொல்லப்படுவார்கள் என இந்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா எச்சரிக்கை விடுத்துள்ளார்.

மகாராஷ்டிரா மற்றும் அரியானாவில் வரும் 21 ஆம் திகதி சட்டப் பேரவை தேர்தல் நடைபெற உள்ளது. இந்த தேர்தலில் போட்டியிடும் பா.ஜ.க., சிவசேனா, காங்கிரஸ், தேசியவாத காங்கிரஸ் ஆகிய கட்சிகளின் தலைவர்கள் தீவிர பிரசாரத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா, மராட்டிய மாநிலத்தின் சங்கிலி மாவட்டத்தில் பா.ஜ.க. வேட்பாளர்களை ஆதரித்துப் பிரசாரம் மேற்கொண்டார்.

அப்போது பேசிய அவர், ஜம்மு காஷ்மீர் மாநிலத்திற்கு 370 பிரிவின் கீழ் வழங்கப்பட்டு வந்த சிறப்பு அந்தஸ்து ரத்து செய்யப்பட்ட விவகாரத்தில் ராகுல் காந்தியும், சரத் பவாரும் தங்களது நிலைப்பாட்டை தெளிவுபடுத்த வேண்டும். காஷ்மீர் விவகாரத்தில் பிரதமர் மோடி சிறப்பான பணியைச் செய்துள்ளார் எனப் பாராட்டிய அமித் ஷா, காங்கிரஸ், தேசியவாத காங்கிரஸ் கட்சிகள் இந்த முடிவை காரணமின்றி எதிர்த்து வருகின்றன என்றும் கூறினார்.

மேலும் மோடியின் ஆட்சியில் நாட்டின் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

இது குறித்து அவர் பேசுகையில் –

பிரதமர் மோடி தலைமையிலான அரசில் நாட்டின் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. நமது இராணுவம் நடத்திய 'சோர்ஜிக்கல் ஸ்டிரைக்'கிற்கு பிறகு இந்தியாவின் மீதான உலகத்தின் பார்வை மாறியுள்ளது. நமது இராணுவ வீரர்களில் ஒருவர் கொல்லப்பட்டால் அதற்குப் பதிலாக 10 எதிரிகள் கொல்லப்படுவார்கள். – என்றார்.






# பிரதமர் மோடிக்கு கமல் திடீர் ஆதரவு

சென்னை,ஒக்.12

நாம்தான் வாக்குப்போட்டு 'கம்' என்றோம். இப்போது 'கோ பாக் மோடி' என்றால் எப்படி என்று கேட்டு பிரதமர் மோடிக்கு மக்கள் நீதி மய்யம் கட்சியின் தலைவர் கமல்ஹாசன் திடீரென ஆதரவு தெரிவித்துள்ளார்.

நடிகரும், மக்கள் நீதி மய்யம் கட்சி தலைவருமான கமல்ஹாசனை, உலக பட்மிண்டன் சாம்பியன் பி.வி.சிந்து நேற்று முன்தினம் அவரது அலுவலகத்தில் சந்தித்தார்.



சந்திப்பு முடிந்த பின்னர் சிந்து கூறும்போது, கமல்ஹாசனை நடிகராக எனக்கு மிகவும் பிடிக்கும். அவருடன், மதிய உணவு சாப்பிட்டமை மறக்க முடியாதது என்றார்.

பின்னர் கமல்ஹாசன் நிருபர்களுக்குப் பேட்டியளித்தார். அவர் அப் போது கூறியவை வருமாறு–

'இந்தியாவுக்கு வெற்றி தேடி தந்த இந்த வீராங்கனையை, வரவேற்பதில் நாங்கள் பெருமை கொள்கிறோம். சீனாவில் இருந்து, 60 ஆண்டுகளுக்கு பின், ஒரு தலைவர் மாமல்லபுரம் வருவது வரலாற்று சிறப்புமிக்க நிகழ்வு.

இரண்டு தேசங்களுக்கும் நன்மை தரும் எந்த முடிவை எடுத்தா லும் அந்த முடிவு வெற்றி பெற வாழ்த்துகிறேன். சீன அதிபரிடம் வைக்க வேண்டிய கோரிக்கையை நம் பிரதமர் வைப்பார். அதைத் திறம்பட செய்ய வாழ்த்துகிறேன்.

நாம் தான் வாக்குப்போட்டு, 'கம்' என்றோம். இப்போது, 'கோ பக் மோடி' என்றால் எப்படி? நம் விமர்சனங்களை எப்போதும் போல முன் வைப்போம். அதற்கு எதிராக சட்டப்பூர்வமாக நடவடிக்கை எடுத்தாலும், நாம் நேர்மையாக நடப்போம்'. –இவ்வாறு அவர் கூறினார்.



# டிரம்பைப் பதவி நீக்கும் எத்தனம் உச்சநீதிமன்றம் வரைச் செல்லும்

## அவரின் கணிப்பு இது

வொஷிங்டன்,ஒக்.12

தன்னைப் பதவி நீக்கக் கோரும் விசாரணை உச்சநீதிமன்றம் வரைச் சென்று முடிவடையும் என அமெரிக்க ஜனாதிபதி டிரம்ப் கணித்துள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதி டிரம்ப் தனது அரசியல் எதிரியும், முன்னாள் துணை ஜனாதிபதியுமான ஜோ பிடெனின் நற்பெயருக்குக் களங்கம் ஏற்படுத்துவதற்காக பிடெனின் மகன் மீது ஊழல் விசாரணை நடத்த வேண்டும் என்று, உக்ரைன் நாட்டு அதிபரை மிரட்டினார் என்ற குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

இந்த விவகாரத்தில் ஜனநாயக கட்சி எம்.பி.க்கள் டிரம்பை பதவி நீக்கம் செய்வதற்கான விசாரணையை நடத்தி வருகின்றனர். இதற்கிடையே ஜனநாயகக் கட்சியினர் நடத்தும் இந்த விசாரணை, அரசியல் சாசனத்துக்கு எதிரானது எனக் கூறி பதவி நீக்க விசாரணையை புறக்கணிப்பதாக வெள்ளை மாளிகை கடந்த புதன்கிழமை அறிவித்தது.

இந்த நிலையில் தன் மீதான பதவி நீக்க விசாரணை உச்சநீதிமன்றம் சென்று முடிவடையும் என டிரம்ப் கணித்துள்ளார்.

இது குறித்து அவர் கூறுகையில் –

இது (பதவி நீக்க விசாரணை) அநேகமாக மிகப்பெரிய உச்சநீதிமன்ற வழக்காக மாறி முடிவடையும். அது என்னையும், எனது குடியரசு கட்சியையும் ஜனநாயக கட்சியினர் எந்த அளவுக்கு மோசமாக நடத்துகிறார்கள் என்பதை பிரதிபலிக்கும்.– எனக் குறிப்பிட்டார்..

## சிரியா மீது தாக்குதல்:

# துருக்கி அரசுக்கு டிரம்ப் எச்சரிக்கை



வொஷிங்டன்,ஒக்.12

சிரியாவில் துருக்கி மேற்கொள்ளும் போர் நடவடிக்கைகள் குறித்து சிந்தித்து செயலாற்ற வேண்டும் எனவும், மீறினால் கடுமையான எதிர் நடவடிக்கை எடுப்போம் என்றும் டிரம்ப் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

வடக்கு சிரியாவில் குர்திஷ் போராளிகள் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் துருக்கி இராணுவம் பயங்கர தாக்குதல்களை நடத்தியுள்ளது. இதில் அப்பாவி பொது மக்கள் உள்பட இதுவரை 40 இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர்.

ஆப்கானிஸ்தான், சிரியா போன்ற நாடுகளில் உள்ள அமெரிக்க இராணுவ வீரர்களை திரும்ப பெறப் போவதாக கடந்த ஞாயிறன்று டிரம்ப் தெரிவித்தார். இதையடுத்து இந்தத் தாக்குதல் சம்பவங்கள் அரங்கேறியுள்ளன.

இந்தத் தாக்குதல்களுக்கு அமெரிக்கா கடும் கண்டனம் தெரிவித்துள்ளது. மேலும் துருக்கியின் பொருளாதாரத்தை முற்றிலும் அழித்துவிடுவோம் என அமெரிக்க அதிபர் டிரம்ப் எச்சரிக்கை விடுத் துள்ளார்.

‘வடக்கு சிரியாவில் துருக்கி மேற்கொள்ளும் நடவடிக்கைகளை முடிந்தவரை மனிதாபிமானத்துடன் செய்யாவிட்டால், பொருளாதாரத் தடைகளை விட கடுமையான நகர்வுகள் குறித்து பரிசீலிப்பேன். துருக்கி அரசு போர் நடவடிக்கைகளை சுமுகமான முறையில் செயல்படுத்தலாம் அல்லது கடுமையாகவும் செயல்படுத்தலாம். ஒருவேளை துருக்கி கடுமையான நடவடிக்கைகளை மேற்கொண்டால், மிகப்பெரிய பொருளாதார தடையைச் சந்திக்க நேரிடும்’ என டிரம்ப் குறிப்பிட்டுள்ளார்.

## அமெரிக்காவில் விநோதம்

# துப்பாக்கியால் சுட்ட குட்டிநாய்

நியூயோர்க், ஒக்.12

அமெரிக்காவின் ஒக்லஹாமா மாகாணத்தில் நாய்க்குட்டி பெண்ணை துப்பாக்கியால் சுட்ட விநோதம் நடந்துள்ளது.

அமெரிக்காவின் ஒக்லஹாமா மாகாணத்தில் உள்ள எனிட் நகரத்தை சேர்ந்த பெண் டீனா ஸ்ப்ரிங்கரும் அவரது நண்பரும் கடந்த சில தினங்களுக்கு முன்பு காரில் பயணம் செய்தனர். பிரெண்ட் பார்க்ஸ் தனது செல்லப் பிராணியான லேப்ரடார் இன நாய்க் குட்டியையும் காரில் கூட்டிச் சென்றார்.

இந்த நிலையில் ரயில்வே கடவை ஒன்றில் ரயில் செல்வதற்காக டீனா காரை நிறுத்தினார். அப்போது கடந்து சென்ற ரயில் எழுப்பிய சத்தத்தினால் காரில் இருந்த நாய்க்குட்டி அதிர்ந்து துள்ளி குதித்தது. இதில் எதிர்பாராத விதமாக முன்பக்கம் உள்ள துப்பாக்கியின் மேல் நாய்க்குட்டி விழுந்தது. இதனால்



துப்பாக்கி விசை அழுத்தப்பட்டு, டீனாவின் தொடையில் குண்டு பாய்ந்தது.

டீனா வலியால் அலறி துடித்தார். உடனடியாக அவர் மீட்கப்பட்டு அருகில் மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டார். அங்கு அவருக்கு தொடையில் அறுவை சிகிச்சை மேற்கொள்ளப்பட்டு, துப்பாக்கி குண்டு அகற்றப்பட்டது. தற்போது அவர் நலமாக இருக்கிறார் என மருத்துவர்கள் தெரிவித்தனர்.

# ஊசியாகப் போடப்படும் இன்சுலினை இனி மாத்திரையாக உள்ளெடுக்கலாம்

ஊசியாகப் போடப்பட்டு வந்த இன்சுலின் மருந்தை மாத்திரையாக உட்கொள்ளும் வகையில் அமெரிக்க ஆய்வாளர்கள் மேம்படுத்தப்பட்ட ஒரு நுட்பத்தைக் கண்டறிந்துள்ளனர்.

மசாசுசெட்ஸ் தொழில்நுட்பக் கல்வி நிறுவன ஆய்வாளர்கள் பன்றி ஒன்றை வைத்து மேற்கொண்ட பரிசோதனையின் முடிவுகள் ‘நேச்சர் மெடிசன்’ என்ற இதழில் இந்த வாரம் வெளியாகியுள்ளது.



இன்சுலின் மருந்து ஊசி மூலமே செலுத்தப்பட்ட நிலையில், சில மாதங்களுக்கு முன் புளூ பெர்ரி அளவிலான மாத்திரையைக் கண்டறிந்து அதன் மூலம் இன்சுலின் செலுத்தி சோதனையிட்டனர்.

ஆனால், அதில் சில குறைகள் இருந்தமையால் அவற்றைக் களைந்து, மேம்படுத்தியுள்ள ஆய்வாளர்கள், மாத்திரையை விழுங்கியதும், அது வேறெங்கும் சிக்காமல் நேராக சிறுகுடலை அடையும் வண்ணம் வடிவமைத்துள்ளதாகத் தெரிவித்துள்ளனர்.

30 மில்லி மீற்றர் நீள மாத்திரை ஜீரண மண்டல அமிலங்களில் பாதிக்காமல் இருக்க அதன் மீது பிரத்தியேக பூச்சு பயன்படுத்தியிருப்பதாக குறிப்பிட்டுள்ளனர்.

சிறுகுடலில் பி.எச். அளவு அதிகம் (காரமாக) இருக்கும் என்பதால் அப்பகுதியை அடைந்த பின்பே மாத்திரை வெடிக்கும் என்றும், பின் மடங்கிய கைகள் போன்ற அமைப்பு, ஒரு மில்லி மீற்றர் நீளம் கொண்ட ஊசி போன்ற கொத்துக்களை சிறு குடல் சுவற்றில் புகுத்தும் என்றும் கூறியுள்ளனர்.

அப்போது, ஊசி போன்ற கொத்துக்கள் கரைந்து அதில் உள்ள இன்சுலின் மருந்து ரத்த ஓட்டத்தில் கலக்கும் என்றும், மாத்திரையோடு வந்த பிற பாகங்கள் தன்னிச்சையாகவே கரைந்துவிடும் என்றும் ஆய்வாளர்கள் குறிப்பிட்டுள்ளனர்.



காலைக்கதிர் Kalaikathir



# தமிழர் பிரச்சினைக்கு தெளிவான தீர்வு முன்வைப்போருக்கு ஆதரவளிக்கலாம்

## சிறிதரன் எம்.பி. கருத்து

கிளிநொச்சி, ஒக். 12

தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கான தீர்வுகள் தொடர்பாக எந்த வேட்பாளர் வெளிப்படையான, தெளிவான திட்டங்களை முன்வைக்கின்றாரோ அவருக்கு ஆதரவளிப்பது பற்றிச் சிந்திக்கலாம் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.சிறிதரன் தெரிவித்துள்ளார்.

அல்லாது விடின் எதுவுமில்லாத திறந்த வெளிக்கு நாங்கள் தள்ளப்படுவோம் எனவும் அவர் குறிப்பிட்டார்.

கிளிநொச்சியில் நேற்று முன் தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு கருத்து தெரிவித்தபோதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்–

தேர்தலில் வெற்றிபெற்ற அடுத்த நாள் சிங்கள அரசியல் கைதிகளை விடுதலை செய்வேன் என கோட்டாபய கூறியிருந்தார். அவர்தான் 50, 60 போராளிகளைச் சுட்டுக்கொன்றது தானே என்ற செய்தியையும் இதற்கு முன்னர் தெரிவித்திருந்தார்.

இந்நிலையில் இவ்வளவு துணிச்சலாகச் சிங்கள இராணுவத்தினரை விடுதலை செய்வேன் எனக் கூறும் அவரால் தமிழ் அரசியல் கைதிகளையும் விடுதலை செய்வேன் என கூறக் கூடிய துணிச்சல் இல்லை.

அதேபோல சஜித் பிரேமதாஸவுக்கு அவரின் தந்தை தமிழர் தரப்பால் கொல்லப்பட்டார் என்ற எண்ணம் அடிமனதில் உள்ளது. அதைவிடுத்து வெளியில் வந்து தமிழர்களுக்கான அரசியல் தீர்வை முன்வைக்க் கூடிய துணிச்சல் அவருக்கும் இல்லை. அவரும் ஒரு தெளிவான செய்தியை தமிழ் மக்களுக்கு கூறும் நிலையில் இல்லை – என்றார். (ஐ)



# ராணி மகாராணி

## 2 ஆம் எலிசபெத் மகாராணி

## பிரிட்டிஷ் முடியாட்சி



பாற்கடல்
மு.சிவநேசன்
sivanesan@usa.com

(நேற்றைய தொடர்ச்சி...)

1944 இல் Corgi இன நாயான சுசான் இவரது செல்லப் பிராணி ஆனது. அன்றில் இருந்து சுசானின் வழித் தோன்றல்களே இன்று வரை அரச குடும்பத்து நாய்கள். மதிய உணவு வேளையின் பின்னர் தனது நாயுடன் மகாராணியார் பக்கிங்காம் அரண்மனை வளாகத்தில் வலம் வருவது வழமை.

அரண்மனையோ லண்டன் நகரின் மத்தியில் அமைந்து உள்ளது. இது 1703 இல் கட்டப்பட்டது. எட்டு இலட்சம் சதுர அடி தளப்பரப்பை கொண்ட அரண்மனையிலோ மொத்தம் 775 அறைகள் அவற்றில் 92 அலுவலகங்கள் 188 பணியாளர் தங்குமிடங்கள் என்பனவும் அடக்கம்.

சுற்றவர விசாலமான நிலப்பரப்பு 39 ஏக்கர் விஸ்தீரணம் கொண்டது. ஹெலி இறங்குதளம், தடாகங்கள், திரைஅரங்கு, மற்றும் பல வசதிகளைக் கொண்ட சிறு நகரம் அது எனலாம். அம்மையார் அங்கு தங்கியிராத காலப் பகுதியில் ஆண்டு தோறும் பொது மக்கள் மற்றும் உல்லாசப் பயணிகள் குறிப்பிட்ட பல பகுதிகளை பார்வையிட முடியும்.

இரண்டாம் உலகப் போரின்போது இது ஜேர்மனியின் குண்டுவீச்சுக்கு இலக்காகி இருந்தது. எனினும் அரண்மனை பாதுகாப்பான சுரங்கப் பாதைகளைக் கொண்டுள்ளது.

அரண்மனையின் புல்வெளிகளின் அழகு கண்கொள்ளாக் காட்சிதான். அங்கே தரையிறங்கிய அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் இனது ஹெலிகள் புல்வெளியை சேதமடையச் செய்ததில் மகாராணியாருக்கு மனவருத்தம் போலும். தனது புல் வெளியை ட்ரம்ப் பாழாக்கிவிட்டார் என்று நகைச்சுவையாக அடுத்து வந்த ஆஸ்திரேலிய பிரதமரிடம் அவர் முறையிட்டிருக்கிறார்.

மக்களாட்சி மலர்ந்து நாடாளுமன்ற நடைமுறையும் ஜனநாயகமும் ஓங்கி இருந்தாலும் முடியாட்சி பாரம்பரியத்தை பேணுவதில் பிரிட்டன் முனைப்புடன் இருக்கிறது. மகாராணியாருக்கு மரியாதை உச்சத்தில் இருக்கிறது. அதனைத் தக்க வைத்துக் கொள்ளும் விதமாக எதிலும் அதிகம் மூக்கை நுழைத்து வில்லங்கத்தை விலைக்கு வாங்காமல் தந்திரோபாயமாக அரண்மனைச் செயற்பாடுகள் அமைந்து விடுகின்றன.

இவ்வளவு பெரும் செலவில் அந்த முறைமையை பேணாமல் கைவிட்டால் என்ன என்ற குரல்களும் அடிக்கடி எழத்தான் செய்கின்றன.

ஐரோப்பிய ஒன்றியத்தில் இருந்து பிரிட்டன் விலக நினைக்கையில், மிக அண்மையில் நாடாளுமன்றத்தை பிறெக்சிற் பிரச்சினையை சமாளிக்கவென முடக்கிய பிரதமர் போரிஸ் ஜோன்சனின் செயற்பாடு சட்டவிரோதமானது என்று நீதிமன்றம் தீர்ப்பளித்தது. நாடாளுமன்றம் முடக்கப்பட்டவேளை அதற்கு ஒப்புதல் வழங்கிய மகாராணியும் இத் தீர்ப்பினால் தர்மசங்கடப்பட்டிருப்பார். ஜோன்சன் இது விடயமாக தொலைபேசியில் மகாராணியிடம் மன்னிப்பும் கேட்டிருந்தார். ★



### எலிசபெத் மகாராணியிடம் மன்னிப்பு கேட்ட பிரதமர்

நாடாளுமன்றம் முடக்கம் சட்டவிரோதம் என நீதிமன்றம் தீர்ப்பு அளித்ததை அடுத்து இங்கிலாந்து ராணி எலிசபெத்திடம் பிரதமர் போரிஸ் ஜோன்சன் மன்னிப்பு கேட்டார்.

இங்கிலாந்து நாடாளுமன்றத்தை 5 வார காலத்துக்கு முடக்கி பிரதமர் போரிஸ் ஜோன்சன் நடவடிக்கை எடுத்தார். அதை ராணி இரண்டாம் எலிசபெத் ஏற்றார்.

ஐரோப்பியக் கூட்டமைப்பில் இருந்து இங்கிலாந்து வெளியேறுவதற்கான 'பிரெக்ஸிட்' நடவடிக்கைக்கான கெடு நெருங்கி வரும் நிலையில் நாடாளுமன்றத்தில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கையில் இருந்து தப்புவதற்கத்தான் போரிஸ் ஜோன்சன் இப்படி செய்தார் என்பது எதிர்க்கட்சி மட்டுமல்ல, ஆளுங்கட்சியின் எம்.பி.க்கள் பலரின் குற்றச்சாட்டும் ஆகும்.

ஆனால் அவரோ, புதிய அரசின் கொள்கைகளை அறிவித்து ராணி இரண்டாம் எலிசபெத் நாடாளுமன்றத்தில் பேசுவதற்காகத்தான் நாடாளுமன்றம் முடக்கப்பட்டதாக கூறிய விளக்கம் ஏற்கப்படவில்லை. அவரது நடவடிக்கைக்கு எதிராக, 'பிரெக்ஸிட்' எதிர்ப்பாளரான இந்திய வம்சாவளி ஜினா மில்லர், அந்த நாட்டின் உயர் நீதிமன்றம் வழக்கு போட்டார். இந்த வழக்கை உயர் நீதிமன்றம் விசாரித்து நாடாளுமன்ற முடக்கம், சட்டவிரோதம் என கடந்த வாரம் தீர்ப்பு அளித்தது. இது ராணி இரண் டாம் எலிசபெத்துக்கு தர்மசங்கடமாக அமைந்தது. இது தொடர்பாக பிரதமர் போரிஸ் ஜோன்சன், அவருடன் தொலைபேசியில் பேசி வருத்தம் தெரிவித்து மன்னிப்பு கேட்டார் என பிரதமர் அலுவலக வட்டாரங்கள் கூறுகின்றன.

# 26 வருடங்களாக சிறையிலுள்ள அரசியல் கைதிகளை திறந்துவிடச் சொல்லும் தெம்பு யாருக்காவது உண்டா?

## கேள்வி எழுப்புகிறார் சிவாஜிலிங்கம்

(எஸ். நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், ஒக். 12

26 வருடங்களாகச் சிறையில் உள்ள அரசியல் கைதிகளை திறந்து விடச் சொல்லும் தெம்பு யாருக்காவது உள்ளதா என்று தேர்தல் வேட்பாளர் எம்.கே.சிவாஜிலிங்கம் கேள்வி எழுப்பினார்.

யாழ்ப்பாணத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

நாடு முழுவதும் தேர்தல் பிரசாரத்தில் ஈடுபடவுள்ளேன். ஆனால், பாதுகாப்பு பிரச்சினைகள் உள்ளன. தெற்கில் காலி மாத்தறை பிரதேசங்களில் தேர்தல் பிரசாரம் செய்ய முடியாத சூழ்நிலை ஏற்படுமென நினைக்கின்றேன். பாதுகாப்பு வழங்கப்பட்டால், காலி, மாத்தறை மாவட்டங்களில் செய்யலாம்.

கொழும்பு, மலையகம், வடக்கு – கிழக்கு உள்ளிட்ட பிரதேசங்களில் எமக்கு கிடைக்கப்பெறும் வசதி வாய்ப்புக்களைப் பெற்றுக்கொண்டு தான், பிரசாரங்களில் ஈடுபட வேண்டியுள்ளது.

சாதிக்க முடியாமல் போகலாம், சாதிக்க முயற்சி எடுத்தவர்களாக மக்கள் மத்தியில் செயற்பட்டவனாக உயிரை விட வேண்டும். பல்கலைக்கழக மாணவர்கள் தமிழ் பிரதிநிதிகளை கைகோர்ப்பதற்கு, எனது நியமனம் வலுச் சேர்த்துள்ளது.

எந்தக் கட்சிகளுடனும், சர்வதேச விசாரணை மற்றும் போர்க்குற்ற விசாரணைகளுக்கான சமரசம் இல்லை. அது யாராக இருந்தாலும், போர்க்குற்ற விசாரணைக்கான கோரிக்கையை முன்னெடுப்போம். அதை எந்தச் சக்தியாலும் தடுக்க முடியாது – என்றார்.



தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் சிவாஜிலிங்கத்துக்கு பித்துப் பிடித்ததுள்ளதாக கூறியிருக்கின்றமை குறித்து கருத்து வெளியிட்ட அவர், சிவாஜிலிங்கத்திற்கு பித்துப் பிடித்துள்ளதென்றால், கஜேந்திரகுமார் தேசியவாதி என்றால், 2010 ஆம் ஆண்டு அவரின் கட்சியைச் சேர்ந்த பத்மினி சிதம்பரநாதன், தமிழ்த் தேசியம் கிடைக்குமென்றா, சரத் பொன்சேகாவுக்கு ஆதரவு கோரி நல்லூர் மந்திரிமனையில் நடைபெற்ற கலந்துரையாடலில் உரையாற்றியிருந்தார்?

சுரேஷ் பிரேமச்சந்திரனுக்கு 10 லட்சம் ரூபா கொடுக்கப்பட்டு செலவு செய்யப்பட்டதே இதைப் பற்றி என்ன சொல்லப் போகின்றார்கள்.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல் நிறைவடைந்த பின்னர், சிறையில் உள்ள இராணுவத்தினரை திறந்துவிடப் போகிறார் என கோட்டாபய கூறுகின்றார். ஏன் 26 வருடங்களாக சிறையில் உள்ள அரசியல் கைதிகளை திறந்துவிடச் சொல்லும் தெம்பு யாருக்காவது உள்ளதா?

ஏன் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசு, அமைச்சரவை பத்திரத்தைப் போட்டு, அரசியல் கைதிகளைத் திறந்து விடுகின்றோம் என்று சொல்லலாமே?

இன்றைய சூழ்நிலைகளைப் பார்த்தால், தமிழ் தேசிய கூட்டமைப்பு ஐக்கிய தேசிய கட்சியின் தமிழ் பிரிவு போன்று செயற்படுகின்றது. தேர்தலுக்கு அண்மித்த காலப்பகுதியில் சஜித் பிரேமதாசவிற்கு வாக்களிக்கச் சொல்வார்கள். ஆகவே, எமது மக்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிக்கு நீதி கிடைக்கும் வரை எமது போராட்டம் தொடரும் – என்றார். (ஐ)

## கிளிநொச்சியில் மாலதி நினைவேந்தல்!



கிளிநொச்சி, ஒக். 12

முதல் பெண் மாவீரர் லெப்.மாலதியின் நினைவேந்தல் நிகழ்வு, கிளிநொச்சியில் அமைந்துள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், வடமாகாண முன்னாள் கல்வி அமைச்சர் த.குருகுலராஜா, பசுபதிப்பிள்ளை, பச்சிலைப்பள்ளி பிரதேச சபை தவிசாளர் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். (ஐ)

## காலிமுகத்திடல் மக்கள் கூட்டம் இலங்கை வரலாற்றில் முதலிடம்!

### சஜித்தின் வெற்றி நிச்சயம் என்கிறார் அமைச்சர் மனோ



கொழும்பு, ஒக். 12

ஐக்கிய தேசியக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸவை ஆதரித்து கொழும்பு, காலிமுகத்திடலில் நேற்று முன்தினம் கூடிய மக்கள் கூட்டம் இலங்கை வரலாற்றில் முதலிடம் பெற்றுள்ளது எனத் தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவரும் அமைச்சருமான மனோ கணேசன் தெரிவித்தார்.

இதனூடாக சஜித்தின் வெற்றி உறுதியாகிவிட்டது எனவும் அவர் மேலும் கூறினார்.

இதேவேளை, கொலைகார ராஜபக்ஷ கும்பலுக்குப் பாடம் புகட்டி சஜித் பிரேமதாஸவை ஜனாதிபதியாக்கவே இந்த மக்கள் வெள்ளம் திரண்டது என அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்தார். (ஐ)

## காரைநகரில் கட்டிமுடிக்கப்பட்ட ஐந்து வீடுகள் கையளிக்கப்பட்டன



யாழ்ப்பாணம், ஒக். 12

தேசிய கொள்கைகள், பொருளாதார விவகாரம், மீள்குடியேற்றம் மற்றும் புனர்வாழ்வளிப்பு, வடக்கு மாகாண அபிவிருத்தி மற்றும் இளைஞர் அலுவல்கள் அமைச்சின் நிதி உதவியுடன் காரைநகரில் கட்டிமுடிக்கப்பட்ட வீடுகளைப் பயனாளிகளிடம் கையளிக்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்றது.

காரைநகர் பிரதேச செயலாளர் திருமதி உஷா சுபலிங்கம் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் மேற்படி அமைச்சின் செயலாளர் வே.சிவஞானசோதி கலந்துகொண்டு வீடுகளைத் திறந்துவைத்து பயனாளிகளிடம் கையளித்தார்.

2019 ஆம் ஆண்டு வீடுகளைக் கட்டி முடிவுறுத்திய ச.சிவகுமார், வே.இந்திரன், ஜீ.கலைச்செல்வி, ஜெ.இன்பராணி, ம.ஐங்கரன் ஆகிய ஐந்து பயனாளிகளின் வீடுகள் நேற்றுமுன்தினம் கையளிக்கப்பட்டன.

இந்த நிகழ்வில் யாழ். மாவட்ட மேலதிக அரச அதிபர் எஸ்.முரளிதரன் (காணி), காரைநகர் பிரதேச செயலக திட்ட இணைப்பாளர், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், கிராம சேவையாளர்கள், தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள், மேற்படி அமைச்சின் பிரதிநிதிகள் எனப் பலர் கலந்துகொண்டனர். (ஐ)



northern PC Park

கணினி உலகில் நம்பகமான சேவையில் 10 வருடங்களுக்கு மேலாக யாழ் மண்ணில்

வடக்கின் கணினிப் பூங்கா

# 10, Muddaskada Junction Stanly Road, Jaffna

தரமான கணினிகளைப் பெற்றுக் கொள்ள நம்மை நாடுங்கள்

www.pcpark.co
info.pcpark.co

Northern Pc Park
NPcpark
northernpcpark
Northern Pc Park

0777570124
0773366443
0766999597
0717772377

0215675566
0212229581
0212222050
0212220388

# தென்னாபிரிக்காவை கதிகலங்க வைத்தார் இந்திய வீரர் மயங்க்!




தென் ஆபிரிக்க அணிக்கு எதிரான 2வது டெஸ்ட் போட்டியில் சதம் விளாசியதன் மூலம், இந்திய வீரர் மயங்க் அகர்வால் புதிய சாதனை படைத்தார்.

புனேவில் இந்தியா – தென்னாபிரிக்கா அணிகளுக்கு இடையிலான 2ஆவது டெஸ்ட் போட்டி நடைபெற்று வருகிறது. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இந்திய அணி துடுப்பாட்டத்தை தெரிவு செய்தது.

அதன்படி நேற்று முன் தினம் களமிறங்கிய இந்திய அணி, முதல் நாள் ஆட்டநேர முடிவில் 3 விக்கெட் இழப்புக்கு 273 ஓட்டங்கள் எடுத்தது. தொடக்க வீரர் மயங்க் அகர்வால் 108 ஓட்டங்களும், புஜாரா 58 ஓட்டங்களும் விளாசினர்.

இரண்டாவது நாளான நேற்று இந்திய அணி தொடர்ந்து துடுப்பாட்டம் செய்தது. இந்நிலையில் சதம் விளாசிய மயங்க் அகர்வால் புதிய சாதனை படைத்துள்ளார்.

முதல் டெஸ்டில் சதம் அடித்த அவர், தற்போது இரண்டாவது டெஸ்டில் சதம் அடித்துள்ளார். தென்னாபிரிக்க அணிக்கு எதிராக, தொடக்க வீரர் அடுத்தடுத்த போட்டிகளில் சதம் விளாசுவது இது இரண்டாவது முறை ஆகும்.

மேலும், அந்த அணிக்கு எதிராக தொடர்ந்து இரண்டு அல்லது அதற்கும் மேற்பட்ட சதம் அடித்த இந்திய வீரர்கள் வரிசையில் மயங்க் அகர்வால் 4ஆவது இடம் பெற்றுள்ளார்.

முன்னதாக, 2009ஆம் ஆண்டு நடந்த டெஸ்ட் தொடரில் தென் ஆபிரிக்க அணிக்கு எதிராக இரண்டு டெஸ்ட் போட்டிகளிலும் தொடர்ந்து சதம் விளாசியிருந்தார். அதேபோல் முன்னாள் வீரர்களான முகமது அசாருதீன், சச்சின் டெண்டுல்கர் ஆகியோரும் இந்த சாதனையை செய்துள்ளனர்.

ரோஹித் ஷர்மா முதல் டெஸ்டில் 2 சதங்கள் அடித்தார். மயங்க் அகர்வால் மொத்தமாக 2 சதங்கள் அடித்துள்ளார். இதன்மூலம், ஒரே டெஸ்ட் தொடரில் இந்திய தொடக்க வீரர்கள் இணைந்து 4 சதங்கள் அடித்த சாதனைப் பட்டியலில் ரோஹித் – மயங்க் ஜோடி இடம்பெற்றுள்ளது.

# தமிழ்பட நடிகையை திருமணம் செய்யும் பிரபல கிரிக்கெட் வீரர்?






பிரபல இந்திய கிரிக்கெட் வீரர் மனிஷ் பாண்டே, தமிழ் படங்களின் மூலம் பிரபலமான நடிகை அஷ்ரிதா ஷெட்டியை திருமணம் செய்ய உள்ளார் எனச் செய்தி வெளியாகியுள்ளது.

துளு படத்தின் மூலம் அறிமுகமானாலும், உதயம் ஹிக்ஷி4, ஒரு கன்னியும் மூனு களவாணிகளும், இந்திரஜித் உள்ளிட்ட தமிழ் படங்களின் மூலம் சினிமாவில் பிரபலமானவர் அஷ்ரிதா ெட்டி(வயது – 26). இவர் தற்போது 'நான் தான் சிவா' என்கிற படத்தில் நடித்து வருகிறார். இந்த நிலையில் அஷ்ரிதாவும் இந்திய அணியில் நிரந்தர இடம் பிடிக்க போராடி வரும் பிரபல வீரரான மனிஷ் பாண்டேயும் காதலித்து வருகின்றனார் கள் எனச் செய்தி வெளியாகியுள்ளது.

மனிஷ் பாண்டே, தற்போது நடைபெற்று வரும் விஜய் ஹசாரே டிராபியில் கர்நாடக அணியை வழி நடத்தி வருகிறார்.

இவர்கள் இருவருக்கும் எதிர்வரும் டிசெம்பர் 2ஆம் திகதியன்று மும்பையில் திருமணம் நடைபெற உள்ளதாகச் செய்தி வெளியாகியுள்ளது. இதில் அவரது நெருங்கிய நண்பர்கள் மற்றும் உறவினர்கள் மட்டும் கலந்துகொள்ள இருக்கின்றனர் எனச் செய்திகள் சுட்டிக்காட்டுகின்றன.

இந்தியா – மேற்கிந்திய தீவுகள் அணி மோதும் ரி–20 போட்டி டிசம்பர் 6ஆம் திகதியன்று ஆரம்பமாக உள்ளது. இதனால் போட்டியில் விளையாட உள்ள சில வீரர்கள் திருமணத்தில் பங்கேற்கலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

# ஈரானில் உதைபந்தாட்டப் போட்டிகளை கண்டு ரசிக்க இனி பெண்களுக்கு அனுமதி!

உதைபந்து இரசிகையொருவர் தீக்குளித்ததன் எதிரொலியாக, சுமார் 40 ஆண்டுகால தடையை உடைத்தெறிந்து, ஈரானில் இனி பெண்களுக்கு உதைபந்துப் போட்டிகளை கண்டு இரசிக்க அந்நாட்டு அரசு, அனுமதி வழங்கியுள்ளது.

உதைபந்து விளையாட்டில் அதிக விருப்பம் கொண்டிருந்த ஈரான் ரசிகை ஒருவர், ஆண் வேடமிட்டு உதைபந்து போட்டியை ரசித்ததால் தனக்கு சிறைத் தண்டனை வழங்கப்படும் என்ற அச்சத்தில் தீக்குளித்து இறந்துவிட்டார்.

இந்த துயரச் சம்பவத்தை தொடர்ந்து, உதைபந்து கூட்டமைப்பு பெண்களை உதைபந்துப் போட்டியை நேரில் காண அனுமதிக்குமாறு ஈரான் அரசுக்கு அறிவுறுத்தியது.

இந்த நிலையில், இதற்கு இணங்கி ஈரானில் இனி பெண்களுக்கு உதைபந்துப் போட்டிகளை கண்டு இரசிக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இதற்கமைய நேற்று டெஹ்ரானில் நடைபெற்ற 2022 ஆம் ஆண்டு உலகக் கிண்ண தகுதிச்சுற்றுப் போட்டியை பெண்கள் நேரில் கண்டு இரசித்தனர்.



# கிங்ஸ் லெவன் பஞ்சாப் இயக்குநராக கும்ப்ளே!

இந்தியாவில் நடைபெறும் ரி–20 கிரிக்கெட் திருவிழாவான ஐ.பி.எல். ரி –20 தொடரில் இடம் பெற்றுள்ள கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணியின் செயற்பாட்டு இயக்குநராக இந்தியக் கிரிக்கெட்



அணியின் முன்னாள் சுழற்பந்து ஜாம்பவான் அனில் கும்ப்ளே நியமிக்கப்பட்டுள்ளார்.

மும்பையில் நடந்த பஞ்சாப் அணியின் நிர்வாக கூட்டத்தில் இதற்கான ஒப்பந்தம் கையெழுத்தானது.

இதுவரை ஐ.பி.எல். சம்பியன் கிண்ணத்தை ஏந்தாத பஞ்சாப் அணி, அனில் கும்ப்ளேயின் நியமனத்தால் உற்சாகமடைந்துள்ளது.

மேலும், ஆஸ்திரேலியக் கிரிக்கெட் அணியின் ஜோர்ஜ் பெய்லி துடுப்பாட்ட பயிற்சியாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

கும்ப்ளே இதற்கு முன்னதாக, மும்பை இந்தியன்ஸ், ரோயல் சேலஞ்சர்ஸ் பெங்களூர் உள்ளிட்ட ஐ.பி.எல் அணிகளுக்கு 'பயிற்சியாளராக இருந்துள்ளார்.

இதுதவிர, சர்வதேச கிரிக்கெட்டை பொறுத்தவரை, இதற்கு முன்னதாக இந்திய அணியின் பயிற்சியாளராக செயற்பட்டுவந்த அனில் கும்ப்ளே, 2017ஆம் ஆண்டு சம்பியன்ஸ் கிண்ண தொடரின் போது, அணித்தலைவர் விராட் கோஹ்லியுடன் கருத்துவேறுபாடு ஏற்பட்டதை தொடர்ந்து, பயிற்சியாளர் பதவியிலிருந்து விலகினார்.

# பெட் கம்மின்ஸ் முதலிடம்




கிரிக்கெட் இரசிகர்கள் ஆவலுடன் எதிர்பார்த்துக் காத்திருந்த டெஸ்ட் பந்துவீச்சாளர்களின் தரவரிசைப் பட்டியலை, சர்வதேச கிரிக்கெட் சபை வெளியிட்டுள்ளது.

இந்த பட்டியலில், ஆஸ்திரேலியாவின் வேகப் பந்து வீச்சாளர் பெட் கம்மின்ஸ், 908 புள்ளிகளுடன் முதலிடத்தில் ஆதிக்கம் செலுத்துகிறார்.

தென்னாபிரிக்காவின் கார்கிஸோ ரபாடா, 828 புள்ளிகளுடன் தொடர்ந்தும் இரண்டாவது இடத்தில் உள்ளார்.

இந்தியாவின் ஜஸ்பிரிட் பும்ரா, 827 புள்ளிகளுடன் மூன்றாவது இடத்தில் உள்ளார்.

மேற்கிந்திய தீவுகளின் ஜேஸன் ஹோல்டர் 814 புள்ளிகளுடன் நான்காவது இடத்தில் உள்ளார்.

தென்னாபிரிக்காவின் வெர்னொன் பிளெண்டர், 811 புள்ளிகளுடன் ஐந்தாவது இடத்தில் உள்ளார்.

இங்கிலாந்தின் ஜேம்ஸ் எண்டர்சன் 798 புள்ளிகளுடன் ஆறாவது இடத்தில் உள்ளார்.

நியூஸிலாந்தின் ட்ரெண்ட் போல்ட், 795 புள்ளிகளுடன் ஏழாவது இடத்தில் உள்ளார்.

நியூஸிலாந்தின் நெய்ல் வாக்னர், 785 புள்ளிகளுடன் எட்டாவது இடத்தில் உள்ளார்.

மேற்கிந்திய தீவுகளின் கெமார் ரோச் 780 புள்ளிகளுடன் ஒன்பதாவது இடத்தில் உள்ளார்.

தென்னாபிரிக்கா அணிக்கெதிரான முதல் டெஸ்ட் போட்டியில், 8 விக்கெட்டுகள் கைப்பற்றிய இந்திய சுழற்பந்து வீச்சாளர் அஸ்வின் 4 இடங்கள் முன்னேறி பத்தாவது இடத்தைப் பிடித்துள்ளார்.

# ராஜபக்ஷாக்கள் காட்டும் அக்கறை சாத்தான் வேதம் ஓதுவது போன்றது

## சாடுகின்றார் வேலுகுமார் எம்.பி.

கொழும்பு, ஒக். 12

தமிழ், முஸ்லிம் மக்களுக்கு எதிராக ஒட்டுமொத்த அடக்குமுறைகளையும் கட்டவிழ்த்துவிட்ட ராஜபக்ஷாக்களும், அவர்களின் சகாக்களும் இன்று சிறுபான்மையின மக்களின் நலன்களைப் பற்றி கதைப்பதானது சாத்தான் வேதம் ஓதுவதுபோல் உள்ளது என்று ஜனநாயக மக்கள் முன்னணியின் பிரதித் தலைவரும், இந்து சமய விவகார அமைச்சின் கண்காணிப்பு நாடாளுமன்ற உறுப்பினருமான வேலுகுமார் தெரிவித்தார்.

வாக்குவேட்டைக்காகப் பேரினவாதத்தையும், சிங்கள, பௌத்த மேலாதிக்கத்தையும் மட்டுமே முன்னிலைப்படுத்தி அரசியல் நடத்தும் கூட்டு எதிரணியின் பக்கம், அரசியல் கைக்கூலிகளாக சில தமிழ், முஸ்லிம் பிரமுகர்கள் செயற்படுகின்றமை வெட்கித் தலைகுனிய வேண்டிய விடயமாகும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

புதிய ஜனநாயக முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாசவுக்கு ஆதரவுதிரட்டி கண்டி மாவட்டத்தில் பல பகுதிகளிலும் நேற்றுக் காலை நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டங்களில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

தேர்தல் பரப்புரைகள் ஆரம்பமாகியுள்ள நிலையில், தமிழ் பேசும் மக்களின் வாக்குகளை கொள்ளையடிப்பதற்காக வழமைபோல் 'நல்லவர்கள்' வேடம் பூண்டு ராஜபக்ஷாக்களும், அவரின் சகாக்களும், பல்வேறு உறுதிமொழிகளை வாரி வழங்கிவருகின்றனர்.

அவர்களின் சொல் ஜாலங்களைக் கண்டு ஏமாந்து வாக்குகளை வாரி வழங்குவதற்கு தமிழ் பேசும் மக்கள், கொண்டைகட்டிய சீனர்கள் அல்லர் என்பதை ராஜபக்ஷ படையணி புரிந்து கொள்ள வேண்டும்.

அதேபோல் பிறப்பால் மட்டுமே தமிழர்களாக இருந்துகொண்டு மக்களை காட்டிக்கொடுத்து வயிறு வளர்க்கும் சில அரசியல் கைக்கூலிகள், தமிழர்களின் வாக்குகளை கூறுபோடுவதற்கு புது விதத்தில் வியூகம் வகுக்க ஆரம்பித்துள்ளனர்.

தாங்கள் ராஜபக்ஷாக்களுக்கு எதிரானவர்கள் என அடையாளப்படுத்திக் கொண்டு மறைமுகமாக கூட்டு எதிரணியை வலுப்படுத்தவதே அவர்களின் உள்நோக்கமாகும். மறுபுறத்தில் தமிழ், முஸ்லிம் வாக்குளை சிதறடிப்பதற்காக சிலர் வேண்டுமென்றெ ஜனாதிபதித் தேர்தலில் களமிறங்கியுள்ளனர். எனவே, வழமையைவிடவும் மக்கள் இம்முறை விழிப்பாகவே இருக்கவேண்டும். நமது கண்முன்னே பல கறுப்பாடுகள் உலாவித் திரிகின்றன.

அதேபோல் தமிழ் மக்களை கொத்துக்கொத்தாக கொன்றுகுவித்தவர்கள் இன்று வடக்குக்குச் சென்று அலுவலகங்களை திறந்து, தாங்கள்தான் தமிழர்களின் மீட்பாளர்கள் என காட்டிக்கொள்ள முயற்சிக்கின்றனர். எந்த முகத்தை வைத்துக்கொண்டு வடக்கு மக்களிடம் ராஜபக்ஷ படையணி வாக்கு கோருகின்றது?



அதேவேளை, 10 வருடங்கள் ஆட்சி அதிகாரம் கையில் இருந்தபோது மலையக மக்கள் தொடர்பில் துளியளவும் சிந்திக்காத ராஜபக்ஷாக்களுக்கு தற்போதுதான் சுடலை ஞானம் பிறந்துள்ளது. நித்திரையில் இருந்து திடீரென விழித்தெழுந்தவர்கள்போல் பல வாக்குறுதிகளை வழங்கிவருகின்றனர்.

அவர்கள் கூறும் விடயங்களில் பெரும்பாலானவற்றை தமிழ் முற்போக்கு கூட்டணி செய்துமுடித்துவிட்டது. குறிப்பாக மலையகத்தில் மறுமலர்ச்சியை ஏற்படுத்துவதற்கு சஜித்தால் மட்டுமே முடியும். அவரை ஜனாதிபதியாக்கி லயன் யுகத்துக்கு நாம் நிச்சயம் முடிவு கட்டுவோம்.

அதுமட்டுமல்ல எம்மிடம் மேலும் பல திட்டங்கள் உள்ளன. அவற்றை வெற்றிகரமாக நிறைவேற்றுவோம். எனவே, சமூக மாற்றத்துக்காக சஜித்துடன் சங்கமிக்குமாறு அனைத்து மக்களிடமும் கேட்டுக்கொள்கின்றேன் – என்றார்.

## காணாமற்போன மீனவர் சாவு; சடலம் கடலில் வீசப்பட்டது!

அம்பாறை, ஒக். 12

அம்பாறை – காரைதீவிலிருந்து ஆழ்கடலுக்கு மீன்பிடிக்கச் சென்று காணாமல்போயிருந்த சாய்ந்தமருது, மற்றும் காரைதீவைச் சேர்ந்த மூன்று மீனவர்களில், ஒருவர் உயிரிழந்துள்ளார். ஏனைய இருவரும் மீட்கப்பட்டுள்ளனர்.

காரைதீவைச் சேர்ந்த, நான்கு பிள்ளைகளின் தந்தையான சண்முகம் சிறிகிருஷ்ணன் (வயது 47) என்பவரே, ஆழ்கடலில் மரணமானார் எனக் கூறப்பட்டுள்ளது.

இவர், கடலுக்குச் சென்று 10ஆவது நாளில் அதாவது 28ஆம் திகதி மரணமானார் என்றும் இரு நாள்களின் பின்னர் அவரது சடலத்தைக் கடலுக்குள் போட்டதாகவும், சக மீனவர்களான சாய்ந்தமருதைச் சேர்ந்த சீனி முகம்மது ஜுனைதீன் (வயது 36), இஸ்மாலெவ்வை ஹரீஸ் (வயது 37) ஆகியோர் கூறியுள்ளனர்.

அந்த இரு மீனவர்களும் சிகிச்சைக்காக, திருகோணமலை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள நிலையில், இவர்களை, சொந்த ஊரான சாய்ந்தமருதுக்குக் கொண்டு வருவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

இதேவேளை, இந்த இரு மீனவர்களது அலைபேசி உள்ளிட்ட பொருள்கள், விசாரணையின் பொருட்டு தம்வசம் வைத்திருப்பதாகக் கூறிய பொலிஸார், மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

மேற்படி மீனவர்கள் சென்ற இயந்திரப்படகு, சர்வதேசக் கடற்பரப்பில் 21 நாள்களின் பின்னர், கடந்த 8ஆம் திகதி மாலை தென் பகுதி மீனவர்களால் கண்டுபிடிக்கப்பட்டிருந்தது. (ஐ)

## எல்பிட்டிய தேர்தலை கண்காணிக்க மஹிந்த தேசப்பிரிய நேரடி விஜயம்

கொழும்பு, ஒக். 12

எல்பிட்டிய பிரதேச சபைத் தேர்தல் மிகவும் அமைதியான முறையில் நடைபெற்றதாகத் தேர்தல் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

எல்பிட்டிய பிரதேச சபைத் தேர்தல் நடைபெறும் இடத்துக்கு களவிஜயமொன்றை மஹிந்த தேசப்பிரிய மேற்கொண்டிருந்தார்.

அதனைத் தொடர்ந்து ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

மக்கள் வாக்களிப்பு நிலையத்துக்கு முன்வரிசையாக நின்று மிகவும் ஆர்வமாக வாக்களித்தனர்.

இவ்வாறு அமைதியான முறையில் தேர்தல் நடைபெற்றதுடன் பொலிஸாரும் தங்களது சேவையைச் சிறந்த முறையில் வழங்கினர்.

இந்தத் தேர்தல் ஜனாதிபதித் தேர்தலைப் போலவே மிகவும் முக்கியமான தேர்தலாகப் பார்க்கப்படுகின்றது. –என்றார். (ஐ)



காலைக்கதிர் Kalaikathir



# இலங்கைக்கான புதிய தூதுவரின் நியமனத்தை ரத்துச் செய்தது பாக்.

கொழும்பு, ஒக். 12

இலங்கைக்கான தூதுவராக அனுப்பப்படவிருந்த முன்னாள் இராணுவ அதிகாரியின் நியமனத்தை பாகிஸ்தான் அரசு ரத்துச் செய்திருக்கிறது.

இலங்கைக்கான பாகிஸ்தான் தூதுவராக இரண்டு ஆண்டுகளாகப் பணியாற்றிய மேஜர் ஜெனரல் ஷாஹிட் ஹஸ்மத்துக்குப் பதிலாக, ஓய்வுபெற்ற இராணுவ அதிகாரியான மேஜர் ஜெனரல் சாட் ஹட்டாக்கை இலங் கைக்குத் தூதுவராக நியமிப்பதற்கு பாகிஸ்தான் பிரதமர் இம்ரான்கான் முடிவு செய்திருக்கிறார் என பாகிஸ்தான் வெளிவிவகார அமைச்சு அறிவித்திருந்தது.

எனினும், இந்த நியமனம் தொடர்பான அறிவிப்பு வெளியிடப்பட்ட மறுநாள், பாகிஸ்தான் அமைச்சரவையில், மேஜர் ஜெனரல் சாட் ஹட்டாக், இலங்கைக்கான தூதுவராக நியமிக்கப்படுவதற்கு, பாதுகாப்பு அமைச்சர் பர்வேஸ் ஹட்டக் எதிர்ப்புத் தெரிவித்தார்.

இதையடுத்து, மேஜர் ஜெனரல் ஹட்டாக்கை, இலங்கைக்கான தூதுவராக நியமிக்கும் முடிவை பாகிஸ்தான் அரசு ரத்துச் செய்துள்ளது. (ஐ)

# விசுவமடு கூட்டுப் பாலியல் வன்புணர்வு; மூன்று இராணுவத்தினருக்கும் விடுதலை

கொழும்பு, ஒக். 12

விசுவமடு கூட்டுப் பாலியல் வன்புணர்வு வழக்கில் குற்றவாளிகளாக காணப்பட்டு, யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றத்தினால் 30 ஆண்டு சிறைத் தண்டனை விதிக்கப்பட்ட மூன்று இராணுவத்தினரை, மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்று முன்தினம் குற்றச்சாட்டுகளில் இருந்து விடுவித்து விடுதலை செய்துள்ளது.

2010ஆம் ஆண்டு விசுவமடு பகுதியில் பெண் ஒருவரை கூட்டாக பாலியல் வன்புணர்வுக்குட்படுத்திய குற்றச்சாட்டில், 2015ஆம் ஆண்டு மூன்று இராணுவத்தினருக்கு யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றம், தலா 30 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதித்திருந்தது.

இந்த தண்டனை மற்றும் தீர்ப்புக்கு எதிராக, குற்றவாளிகள் மூவரும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்திருந்தனர்.

இந்த மனுக்கள் மீது ஐந்து ஆண்டுகளாக நடத்தப்பட்ட விசாரணைகளின் முடிவில், நேற்று முன்தினம் மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர்களான குமுதினி விக்ரமசிங்க மற்றும் பிரியந்த பெர்னாண்டோ ஆகியோர், படையினர் மூன்று பேரையும் குற்றச்சாட்டுகளில் இருந்து விடுத்து விடுதலை செய்ய உத்தரவிட்டனர்.

குற்றம்சாட்டப்பட்ட மூவரும் அனைத்து குற்றச்சாட்டுகளில் இருந்தும் விடுவிக்கப்பட்டுள்ளனர். சாந்த சுபசிங்க, தனுஷ்க புஸ்பகுமார, பிரியந்த குமார ஆகிய மூன்று இராணுவத்தினருமே விடுவிக்கப்பட்டவர்களாவர்.

புஷ்பகுமார சார்பில் முன்னலையாகிய சட்டத்தரணி ரஞ்சித் பெர்னாண்டோ, படையினர் மீதான குற்றச்சாட்டுகள் ஒரு தீவிரவாத குழுவினால், வேண்டுமென்றே - தீய நோக்கத்துடன் முன்வைக்கப்பட்டன என்று வாதிட்டிருந்தார். (ஐ)

# வவுனியா குளத்திலிருந்து பெண்ணின் சடலம் மீட்பு

வவுனியா, ஒக். 12

வவுனியா, பேயாடி கூழாங்குளம் குளத்தில் இருந்து பெண் ஒருவரின் சடலம் நேற்று மீட்கப்பட்டது.

வவுனியா, பேயாடி கூழாங்குளம் பகுதியைச் சேர்ந்த பெண் ஒருவர் கடந்த நான்கு தினங்களுக்கு முன்னர் வீட்டில் இருந்து வெளியில் சென்ற நிலையில் காணாமல் போயிருந்தார். இது தொடர்பில் மடுகந்தை பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

நேற்று பேயாடிகூழாங்குளப் பகுதியில் ஆடு மேய்த்துக் கொண்டிருந்தவர்கள் குளத்தில் சடலம் ஒன்று மிதப்பதை அவதானித்து பொலிஸாருக்குத் தகவல் வழங்கினர். சம்பவ இடத்துக்குச்சென்ற மடுகந்தை பொலிஸாரும், இராணுவத்தினரும் குளத்தில் இருந்த சடலத்தை மீட்டனர்.

இந்தச் சடலமானது கடந்த நான்கு தினங்களுக்கு முன்னர் காணாமல் போனதாகத் தெரிவிக்கப்பட்ட எஸ்.விஜயலக்சுமி (வயது 56) என்பவருடையது என உறவினர்களால் அடையாளம் காணப்பட்டுள்ளது.

இது குறித்து மடுகந்தை பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

(ஐ - 100)








இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள காலைக்கதிர் பிறஸ் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 12.10.2019 இல் வெளியிடப்பெற்றது.